தப்லீக் வேலையின் முக்கிய உசூல்

احياء جميع ما جاء به النبى صلى الله عليه وسلم

முபல்லிக் அளீம் ஹளரத் மவ்லானா
ஸயீத் அஹ்மத் கான் ஸாஹிப் (ரஹ்) அவர்களின்
மிக முக்கியமான கடிதம் ...

தமிழில் :

மௌலவி ஹாபிழ் முப்தீ

A. முஹம்மது ஜுபைர் காஸிமீ

இமாம் மஸ்ஜிதே ஹுதா

சைதாபேட்டை சென்னை 15

வெளியீடு :

தஹ்ரீக்கே ஈமான்

இஸ்லாமிய மொழிப்பெயர்ப்பு நூல் வெளியீட்டகம்

63, சலவையாளர் காலனி, 2-வது தெரு,
சைதாபேட்டை, சென்னை - 15.

நூல் விபர அட்டவணை

நூலின் பெயர் : தப்லீக் வேலையின் முக்கிய உசூல்

ஆசிரியர் : ஸயீத் அஹ்மத் கான் ஸாஹிப் (ரஹ்)

மொழிப்பெயர்ப்பு

ஆசிரியர் : A. முஹம்மது ஜுபைர் காஸிமீ

வெளியிடுவோர் : தஹ்ரீக்கே ஈமான், சென்னை

பக்கங்கள் : 48

பிரதிகள் : 3000

விலை : ரூ. 10.00

அச்சிட்டோர் : அல்மதனீ பிரிண்டிங் ஒர்க்ஸ்,

தென்னூர் ஹைரோடு பள்ளிவாசல்,

திருச்சி - 17. போன் : 2740013.

தப்லீக் வேலையின் முக்கிய உசூல்

ஓர் அறிமுகம்

எந்தவொரு வேலையாக இருந்தாலும் அதற்குரிய சரியான உஸூல்களோடு அதைச் செய்யும் போது தான் அது சரியான பலனைத் தருகிறது என்பது தெளிவான விஷயமே! தப்லீக் திருப்பணியின் உஸூல்களைத் தெரிந்துகொள்ள இதன் நிறுவனர் ஹள்ரத் மவ்லானா முஹம்மது இல்யாஸ் ஸாஹிப் (ரஹ்) அவர்களுடன் நெருக்கமுள்ள நம்பிக்கைக்குரிய பெரியார்கள் மூலம் வேலையின் உஸூலைக் கற்றுக் கொள்வதை விட சிறந்ததொரு வழி வேறு இருக்க முடியாது.

ஹள்ரத் மவ்லானா ஸஈத் அஹ்மத்கான் ஸாஹிப் (ரஹ்) அவர்கள் பெரிய ஹஜ்ரத் ஜீ மர்ஹூம் அவர்களுடன் மிக நெருக்கத்திற்குரிய தோழராக இருந்தது மட்டு மல்லாமல் அவர்களும் தலைசிறந்த ஆலிமாக திகழ்ந் தார்கள். மேலும் இந்த தப்லீக் பணியில் தன் ஆயுள் முழு வதையும் அர்ப்பணித்து தப்லீக்கில் நன்கு அனுபவம் பெற்றவர்களாக இருந்தார்கள். அன்னாரது ஒவ்வொரு சொல்லும் நமக்கு விலை உயர்ந்த பொக்கிஷமாகவும், மதிக்கத்தக்க அருட்கொடையாகவும் இருக்கிறது.

அவர்கள் தமது நண்பருக்கு எழுதிய நீண்டதொரு கடிதமே இந்நூல். இந்நூலைப் படிப்பதன் மூலம் தஃவத் உழைப்பில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் நல்ல தெளிவு ஏற்படும் என்பதில் ஐயமில்லை. அல்லாஹ் அனைவருக்கும் நல்லருள் புரிவானாக! ஆமீன்!!

- மொழிபெயர்ப்பாசிரியர்.

உள்ளே உள்ளவை..

	பக்கம்
1. ஹிக்மத்துடனும் பஸீரத்துடனும் வேலை செய்யுங்கள்.	6
2. தீனுடைய துறைகளுக்கிடையே மோதல் இருக்கக் கூடாது.	7
3. இல்முடையோருக்கு தஃவத் தரும் முறை.	8
4. திக்ருடையோருக்கு தஃவத் தரும் முறை.	9
5. தீன் துறைகளுக்கிடையே உதவியே உண்டு; போட்டி கிடையாது.	9
6. மக்ஸூத் பித்தாத்தும் மவ்கூப் அலைஹியும்.	10
7. தஃவத்தின் பலகீனம் அனைத்து துறைகளிலும் பிரதிபலிக்கும்.	11
8. அரசனை மதிப்பது அரசகட்டளையை நிறைவேற்றுவதற்குக் காரணமாகும்.	11
9. ஈமான் உள்ள ஒவ்வொருவரும் மதிப்பிற்குரியவரே.	12
10. குறைகளைப் பார்க்கின்ற நோய்க்குரிய பரிகாரம்.	12
11. இல்முடையவர்கள் நம்முடைய தலைவர்களென நினைக்க வேண்டும்.	13
12. நபியுடைய அடிப்படைச் சட்டங்களை விட்டதால் விளைந்த கேடுகள்.	14
13. நபி அமைத்த தர்த்தீபின் அடிப்படைச் சட்டங்கள்.	15
14.தஃவத்துடைய மைதானத்தில் கற்றலும் கற்பித்தலும்.	19
15. ஈமானுடைய சிபத்துகள்.	20
16. நம்முடைய உஸூல் மீறல்கள் தடைகளாக இருக்கின்றன.	21
17. இக்ராம் முஸ்லிம் மிகப்பெரிய ஆயுதம்.	21
18. ஒப்புக் கொள்ளாததற்கு காரணம்?	22

	பக்கம்
19. பாக்கியமிழப்பதற்கான காரணங்கள்.	23
20. ஆட்சேபணைக்கும் சந்தேகத்திற்கு மிடையே உள்ள வித்தியாசம்.	25
21. ஹிக்மத்.	26
22. பணிவு.	27
23. பெரியார்களின் சகவாசமும் மஷ்வராவும்.	27
24. ஆறு நெம்பரும் வேலையும்.	28
25. சோதனை உயர்வுக்குரிய வழியே.	29
26. வேலை பரவுவதே ஆழத்திற்குக் காரணம்.	32
27. நபிமார்களின் அரசியல்.	34
28. சின்னச்சின்ன கருத்து வேற்றுமைகளை விட்டும் தவிர்த்து கொள்ளல்.	35
29. பயானுடைய ஒழுக்கங்கள்.	36
30. இக்ராம் முஸ்லிம்.	37
31. சாத்திகளுக்கு இக்ராம்.	37
32. இக்ராமுடைய முக்கிய உஸூல்	38
33. இல்மைக் கற்பதிலே ஸஹாபிகளின் தர்த்தீப்.	38
34. திக்ரு செய்வதிலே ஸஹாபிகளின் தர்த்தீப்	40
35. எல்லா அமல்களையும் தொடர்ச்சியாகச் செய்வது அவசியம்.	41
36. பதவியாசையிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்.	42
37. கஷ்த்துடைய ஒழுக்கங்களும் அதன் முக்கியத்துவமும்.	43
38. தாயீ உடைய எட்டு பண்புகள்.	46
39. இஸ்திகாமத்துடன் செயல்பட பதினேழு காரணிகள்.	46

بسم الله الرحمن الرحيم

தப்லீக்வேலையின் முக்கிய உசூல்

1. ஹிக்மத்துடனும் பஸீரத்துடன் வேலை செய்யுங்கள்:

சங்கை, கண்ணியமிக்க ஜனாப்

மௌலவி ஜம்ஷேக், மௌலவி முஸ்தகீம் ஸாஹிப்

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

அல்லாஹுதஆலா உங்கள் உழைப்பையும், முயற்சி களையும்பலனளிப்பவைகளாக்கி ஒப்புக் கொள் வானாக!

ஒரு முக்கியமான விஷயம், நாம் உழைப்பு செய்து வருவதோடு இவ்வேலையின் ஹகீகத், அதை செயலாக்கும் விதம், இதன் உஸூல் ஒழுக்கங்களை விளங்கிக்கொள்ள முயற்சி செய்யவும் வேண்டும். அதேசமயம் பெரியார்களிடம் அதைத் தெளிவுபடுத்திக் கொள்ளவும் வேண்டும்.

இவ்வேலையை வெறும் தக்லீதின் (விஷயங்களை ஆராயாமல் அப்படியே பின்பற்றுதல்) வழிமுறையில் செய்யக்கூடாது. மாறாக, கல்பீ இன்ஷிராஹ் உடனும் (விசாலமான மனம்) பஸீரத்துடனும் வேலை செய்பவர்களாக நாம் மாறவேண்டும். அதற்காக அல்லாஹு தஆலாவின் திருவசனங்களோடும் நபிமொழிகளோடும் ஒப்பீடு செய்வது கொண்டே இருக்க வேண்டும். மேலும் இவ்வேலையின் ஹிக்மத்தெனும் நுணுக்கம் நமக்கு தெளிவுபடுத்தப் படவும் வேண்டும். ஹிக்மத்துடன் இவ்வேலையைச் செய்ய நமக்குத் தெரியவேண்டும். முஸ்லிம்களிலுள்ள பொதுவான துறையிலுள்ளோரும் பல்வேறு தீன் பணிகளில் ஈடுபட்டிருக்கும் குறிப்பா னோரும் நம்முடைய ஹிக்மத், அக்லாக்கால் (நற்குணங்கள்) கவரப்பட்டு இவ்வேலையின் பக்கம் திரும்பவேண்டும். மேலும் இவ்வேலை முழு தீனுக்கும்

"ஒட்டுமொத்தத்தின்" அந்தஸ்தில் உள்ளது. மீதமுள்ள எல்லாத் துறைகளும் இதனுள் அடங்கியுள்ளது என்ற விஷயத்தில் யாருக்கும் சந்தேகம் எழக்கூடாது. ஆட்சேபணை செய்வதற்கும் இடந்தரக்கூடாது. அத்தோடு தன்னை கல்வியறிவு குறைந்தவன் என்றும் தேவையு டையவன் என்றும் எண்ணியவாறு, யா அல்லாஹ்! இந்த விஷயத்தை எங்களுக்கு விளக்கித்தா! என்று அல்லாஹு தஆலாவிடம் துஆச் செய்யவும் வேண்டும். காரணம்? மௌலானா முஹம்மது இல்யாஸ் நவ்வரல்லாஹு மர்கதஹு அவர்கள் ''நான் இவ் வேலையின் ஆயிரத்திலொரு பகுதியைக் கூட மக்களிடத்தில் எடுத்து வைக்கமுடியவில்லை; எவ்வளவு சொன்னேனோ அதில் ஆயிரத்திலொரு பகுதியைக்கூட யாரும் விளங்கவில்லை'' என்று சொல்லியிருக்க, இன்றைய காலத்தில் ஷைத்தான் மிக லேசான முறையில் நாம் இவ்வேலையை விளங்கி விட்டோம் என்ற எண்ணத்தைப்போட்டு நம்மை நிம்மதி யடையச் செய்துவிடுகிறான். ஹஜ்ரத் அவர்களின் பொன் மொழியில் ஆயிரத்திலொருபகுதி என்பதற்குப் பதிலாக நூற்றிலொரு பகுதி என்றுள்ளது என சிலர் கூறுகின்றனர். ஆக, அவர்களே இப்படிச் சொல்கிறார்களென்றால் நாம் எந்தளவு இதை விளங்க முடியும்?

2. தீனுடைய துறைகளுக்கிடையே மோதல் இருக்கக் கூடாது:

இன்னும் நமக்கு தஃவத் கொடுக்கவே தெரியவில்லை; அதன் நுட்பம் மற்றும் ஆழமான பார்வையைப்பற்றியும் நாம் அறிந்திருக்கவில்லை. அதனால் ஏராளமான சகோதரர் களுக்கு குறிப்பாக தீனுடைய ஏதேனுமொரு துறையை இயக்குபவர்களுக்கு, நம்முடைய தஃவத்தாலும் நம்முடைய பயான்களாலும் நாம் அவர்கள் சார்ந்திருக்கும் துறைகளை குறையுடையதாகவோ, அல்லது இழிவான தாகவோ கருதுவதைப்போன்று நம்மீது ஆட்சேபணை எழுந்து

விடுகிறது. நமக்கு தஃவத் கொடுப்பதின் சரியான சீரான வழிமுறை வந்துவிட்டால் ஒவ்வொருவரும் நம்மைத் தனது உதவியாளர் என்றும் நன்மை நாடுபவர் என்று எண்ணி தாமும் நெருங்கி வருவார்கள். நம்மையும் தம்முடன் நெருக்கமாக்கிக் கொள்வார்கள்.

உதாரணமாக, நாம் தஃவத்துடைய நம்பர், அதன் முக்கியத்தைப்பற்றிப் பேசுகையில், சில சமயங்களில் இல்முடையோரின் துறைகளில் - அதாவது மத்ரஸாக்களில் அதை (தஃவத்தை) எந்தளவுக்கு உயர்த்திப் பேசுகிறோமென்றால் இதற்கு முன்னால் (அதாவது தஃவத்திற்கு முன்னால்) ஒன்றுங்கிடையாது என்று சொல்வதைப் போன்று இருக்கிறது. இன்னுஞ் சில சமயங்களில் திக்ருடையோருக்கு முன்னிலையில் இப்படிப் பேசிவிடுகிறோம். பெரும்பாலான சொற்பொழிவாளர்கள், மற்ற நபிமார்களுக்கு முன் ரஸூல் (ஸல்) அவர்களின் சிறப்பைச் சொல்லும் போது எந்தளவுக்கு பேசிவிடுகிறார்களென்றால் மற்ற நபிமார்களின் அந்தஸ்தைக் குறைத்துவிடுகிற சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. அவர்களின் இந்த பயான் பேசும் முறை தீனுக்குப் பெரும் அபாயத்தை விளைவிக்கக் கூடியதாகும். இதேபோலவே நாம் பயான் செய்யும் முறையும் அபாயகரமாக இருக்கிறது.

3. இல்முடையோருக்கு தஃவத் தரும் முறை

ஆரம்பத்தில் இல்முடைய சிறப்புகளைப்பற்றி நிறையச் சொல்லுங்கள்; குர்ஆன், ஹதீஸிலிருந்து இல்முடையோரின் அந்தஸ்துகளைக் கூறுங்கள்; இல்முடையோருடைய மதிப்பும் நேசமும் நம் உள்ளத்திலே நிரம்பிவிடும் அளவுக்குச் சொல்லுங்கள்: இந்த இல்மு அல்லாஹுதஆலாவின் சுன்னத். இந்த இல்மிடமும், இல்முடையோரிடமும் நாம் தேவையுள்ளவர்கள் என்றெண்ண வேண்டும். அதன்பிறகு இந்த இல்மு முழு உம்மத்திலுள்ள ஒவ்வொருவரிடமும் அவரது அவசியத்திற்கேற்பவும்

எப்படி வந்து சேரும்? அதற்காகவே இந்த உழைப்பு. இந்த உழைப்பைச் செய்தவாறே இந்த இல்மைப் பரப்பினால், தன் தேவைக்குரிய இல்மைத் தெரியாத உம்மத்தின் அறிவிலியாக எந்த ஒரு நபரும் இருக்க மாட்டார். பெண்களானாலும் ஆண்களானாலும் ஒவ்வொரு வருக்கும் இது தேவை. ஆகையால் நாங்கள் இந்த உழைப்பில் இல்முடையோரிடம் மிகுந்த தேவையுடையவர் களாக இருக்கிறோம் என்று சொல்லுங்கள்.

4. திக்ருடையோருக்கு தஃவத் தரும் முறை:

இவ்வாறே, குர்ஆன், ஹதீஸில் திக்ரைப்பற்றியும் திக்ருடையோரைப்பற்றியும் வந்துள்ள சிறப்புகளையும் மகத்துவங்களையும் நன்றாகச் சொல்லுங்கள்; எந்தளவுக்கென்றால், நமது உள்ளம் திக்ராலும், திக்ருடையோரின் கண்ணியத்தாலும் நிரம்பிவிடும் அளவுக்கு ஆசையுடனும் ஆர்வத்துடனும் இவற்றை நாம் கூறவேண்டும். பிறகு பெண்ணோ, ஆணோ உம்மத்தின் ஒவ்வொரு நபருக்கும் திக்ரு அவசியத் தேவையாகும்.

இதில் திக்ரைப் பரப்ப திக்ருடையோரிடம் நாங்கள் தேவையுள்ளவர்களாக உள்ளோம் என்பதைச் சொல்லுங்கள்.

5. தீனுடைய துறைகளில் உதவியே உண்டு; போட்டி கிடையாது:

பயான் செய்யும்போது ஒரு நம்பரை இன்னொரு நம்பருக்குப் போட்டியாகக் கூறாதீர்கள். (காரணம், இதனால் குறை கூறுகின்றார் என்ற ஐயம் ஏற்பட்டு விடுகிறது) இதற்குமாறாக ஒன்றுக்கொன்று உதவியாக இருக்க வேண்டுமென்பதைக் கூறுங்கள். ஏனென்றால் தீன் துறைகள் யாவும் மனித உறுப்புகளைப் போன்றவையே. கண்ணால் பார்க்கும் வேலை, நாவால் பேசும் வேலை, கையால் பிடிக்கும் வேலை, காதால் கேட்கும் வேலை, கால்களால் நடக்கும் வேலை, மூளையால் சிந்திக்கும்

வேலை, இவ்வேலைகள் அனைத்தும் மனிதனுக்குத் தேவையானவை. ஒரு உறுப்பில் பலகீனம் வந்துவிட்டா லோ, அல்லது குறை ஏற்பட்டாலோ அதனால் முழு உடம்பும் சிரமப்படும்; மற்ற பொருட்களிலிருந்து பலனடைவதில் இழப்பேற்படும். இந்த உறுப்புகள் அனைத்தும் மிகத் தேவையானவை. இவற்றுள் ஒன்று மற்றொன்றிற்கு உதவியாளனே. போட்டியாளன் அல்ல. இவ்வாறே அல்லாஹ்வின் திக்ரும்- இல்மும், இபாதத் கித்மத், முஆமலாத், களாத் (நீதித்துறை) யாவும் ஒன்றுக் கொன்று உதவுபவைகளே அன்றி போட்டியானவை அல்ல. உதவுபவையாக ஆகும்போதுதான் தீன் முழுமையடையும். தஃவத் தென்பது இந்தத்துறைகள் அனைத்தையும் உலகில் பரப்பவும், பொதுவாக்கவுமே.

6. மக்ஸூத் பித்தாத், (அடிப்படை நோக்கம்) மவ்கூப் (அடையும்வழி) அலைஹிக்கிடையே வித்தியாசம்.

இவ்விரண்டிற்கிடையேயுள்ள வித்தியாசத்தை விளங்கிக் கொள்ள முதலில் மெஹ்னத் செய்யவேண்டும். அல்லாஹு தஆலாவின் திக்ரு இல்ம், சட்டங்கள், இபாதத் போன்றவைகளின் அசல் உண்மையான நோக்கமென்ன? அது அல்லாஹு தஆலாவின் பொருத்தத்தைப் பெறுவது மட்டுமே என்றாலும் அல்லாஹு தஆலாவின் பொருத்தம் இந்தத்துறைகளில் ஈடுபடுவதால் கிடைக்கிறது. அதனால், இத்துறைகள் அசல் நோக்கத்தைப் போன்றதாகும். அதாவது அல்லாஹு தஆலாவின் பொருத்தத்தைப் பெற்றுக்கொள்ள மவ்கூப் அலைஹியாகும். இத்துறைகளின் மவ்கூப் அலைஹி தஃவத்தாகும். தஃவத்தால் மீண்டும் எல்லாத் துறைகளும் உருவாகிறது. தீனுடைய துறைகள் தன்னுடைய சரியான படித்தரத்திற்கும் உண்மை நிலைக்கும் வந்து விடும்போது அசல் நோக்கமான அல்லாஹு தஆலாவின் பரிபூரணப் பொருத்தம் கிடைத்து விடுகிறது.

7. தஃவத்தின் பலவீனம் அனைத்துத் துறைகளிலும் பிரதிபலிக்கும்.

தஃவத்தில் பலவீனமோ குறைபாடோ ஏற்பட்டால் அதன் குணபாடு எல்லா தீன் துறைகளிலும் ஏற்படும். மற்ற துறைகளில் ஏற்பட்ட அதன் பிரதிபலிப்பு பொருத்தத்தைப் பெறுவதில் உண்டாகும். பலகீனத்துடன் அல்லது குறை பாட்டுடன் தீன் துறைகளில் செல்பவர் அல்லாஹு தஆலாவின் முழுமையான திருப்தியைப் பெற முடியாது. இந்த விஷயத்தை ஒரு உதாரணத்தின் மூலம் விளங்கலாம். உலகில் ஒரு பழமிருக்கிறது என்றால் அதற்கொரு மரம் வேண்டும். மரங்களுக்கு நிலம் வேண்டும். அசலான நோக்கம் மரமோ, பூமியோ அல்ல. பழம் ஆகும். ஆனால் பழத்துக்கு மவ்கூப் அலைஹி மரம். மரங்களின்றி பழம் கிடைக்காது. அல்லாஹுதஆலா மரமின்றி பழம்தரவும் சக்திபெற்றவன்தான். இருந்தாலும் மனிதனை உலக காரணிகளால் பிணைத்துள்ளான். பூமியின்றி மரம் இருக்காது. எனினும் நிலத்தின் (சக்தி) ஆற்றல் பலவீனமாக இருந்தால் அதன் பிரதிபலிப்பு மரங்கள் மீது படும். மரங்களுடைய பலவீனத்தின் பிரதிபலிப்பு பழத்தினுடைய பலவீனத்தின் மீது உண்டாகும். ஆகவே ஒவ்வொரு வேளையும் நமது அசல் நோக்கம் நம் கண்முன்னால் பிரதான குறிக்கோளாக இருக்க வேண்டும். அதாவது அல்லாஹு தஆலாவை முழுமையான முறையில் திருப்தி செய்யும் உணர்ச்சி நமக்குள் உருவாகிக் கொண்டிருக்க வேண்டும். அவன் கட்டளைகளை ஏற்று நடப்பதிலேதான் அல்லாஹு தஆலா திருப்தியடைகிறான் என்ற யகீனும் இருக்க வேண்டும்.

8. அரசனை மதிப்பது அரசகட்டளையை நிறைவேற்று வதற்குக் காரணமாகும்.

அல்லாஹு தஆலாவை திக்ரு செய்வது இறைக் கட்டளையைப்பற்றிய மதிப்பையும், கண்ணியத்தையும்

உண்டாக்கவே! மேலும் ஏவுபவரின் மதிப்பு ஏவல்களுக்கு முன்பே மனதில் இருக்க வேண்டும். இல்லையென்றால் ஏவல்களை பூர்த்தி செய்வது கடினமாகிவிடும். அரசனு டைய மாண்பும் அவனுடைய மதிப்பும் உள்ளங்களில் நேசமும் இருக்குமளவுதான் அரச கட்டளைகள் குடி மக்களில் நடக்கும். ஆக இந்த தஃவத் பணி மிகவும் கவனமாகக் கையாளப்பட வேண்டிய வழியாகும். இதற்காக தன்னையே உருக்க வேண்டும். தன் மதிப்பை அழித்துக் கொள்ள வேண்டும்.

9. ஈமானுள்ள ஒவ்வொருவரும் மதிப்பிற்குரியவரே

முஸ்லிமுடைய அந்தஸ்து அவனுடைய சிறப்புகளுக் கேற்றவாறு மனதில் இடம்பிடித்துக் கொண்டே செல்ல வேண்டும். ஆகத் தாழ்ந்த ஒரு முஸ்லிம் அவன் எவ்வளவு பெரிய பாவியாக இருந்தாலும் அவன் அல்லாஹு தஆலாவின் மீது ஈமான் கொண்டுள்ள காரணத்தால் நம்முடைய பார்வையில் அவன் உயர்ந்திருக்க வேண்டும்; அப்பொழுது தான் அவனுடன் நம்மால் நற்குணத்துடன் பழகமுடியும்.

ஒவ்வொரு முஸ்லிமுடைய சந்திப்பிற்கும் நான் தேவையுடையவன் என்றெண்ண வேண்டும். அவரது சந்திப்பால் அல்லாஹு தஆலா பொருந்திக் கொள்கிறான். பரக்கத்துகள் கிடைக்கிறது; ரஹ்மத்து'கள் வருகிறது; நேசம் அதிகரிக்கிறது. அத்தோடு ஒரு முஸ்லிமைச் சந்திப்பது ஈமானை அதிகப்படுத்துகிறது. மிகச் சாதாரண முஸ்லிமைச் சந்திப்பதால் இத்தனை பலன்கள் உள்ளதென்றால் இல்முடையோர் மற்றும் திக்ருடையோரான பெரியார்களைச் சந்திப்பது எத்துணை மதிப்பிற்குரிய காரியம்?

10. குறைகளைப் பார்க்கின்ற நோய்க்குரிய பரிகாரம்

இந்த தஃவத் பணியில் ஒரு குறிப்பான விஷய மென்னவென்றால் மக்களின் தவறுகள், பாவங்கள்,

குறைகளை நோக்கி பார்வை செல்வதிலிருந்து காத்துக் கொள்ள வேண்டும். ஷைத்தான் ஊசலாட்டத்தை போட்டு விட்டால் அப்பொழுதே தவ்பா, இஸ்திஃபார் மூலமும், அம்முஸ்லிமை பிரியம், நற்குணத்துடன் சந்திப்பதாலும் அதை நிவர்த்தி செய்யுங்கள்.

மேலும் மூன்று காரியங்களை செயல்முறையில் காட்டுங்கள்:

1. அவரைச் சந்தித்தால் ஸலாம் கூறுங்கள்
2. உங்களிடம் அவர் வரும்போது அவரை நல்லதொரு இடத்தில் அமரச் செய்து கண்ணியப்படுத்துங்கள்.
3. அடிக்கடி அவருக்கு அன்பளிப்பு கொடுங்கள்.

தவ்பா, இஸ்திஃபார் செய்வதோடு இம்மூன்று காரியங்களும் நல்ல விளைவை ஏற்படுத்துபவையாகும்.

11. இல்முடையவர்களை நம்முடைய தலைவர்களென நினைக்க வேண்டும்.

இவ்வேலையில் பொதுமக்கள் கிளம்புவதற்கு அவசியம் தஃவத் தரவேண்டும். ஆனால் எண்ணம் எப்படியிருக்க வேண்டும்? இவர் தஃவத்தில் வந்துவிட்டால் என்னை விட மேலான முறையில் நடப்பார். இவரால் தீன் பரவுவ தில் மிகுந்த உதவி கிடைக்கும் என்ற எண்ணத்தோடு தஃவத் தர வேண்டும். மேலும் இல்முள்ளவர்களை தமது தலைமையாளர்களாகக் கருதி அவர்களைச் சந்தித்து அவர்களுடைய துஆக்களைத் தேடுபவராக இருக்க வேண்டும். மஷ்வராவோ ஒவ்வொரு துறையிலும் அத்துறை சம்பந்தப்பட்டோரிடம் கேட்கவேண்டும். உதாரணமாக கண் ஆபரேஷன் செய்ய வேண்டுமென நினைக்கிறவர், ஒவ்வொரு உறுப்பிலுமுள்ள சில வியாதிகளுக்கு மட்டும் சிகிச்சை செய்யும் டாக்டரிடம் போகமாட்டார். மாறாக கண்சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற டாக்டரிடமே ஆலோசிப்பார். இதுவோ உலகியல் உதாரணம். தீனியல்

உதாரணம் யாதெனில் ஒருவருக்கு மஸ்அலா தெரிய வேண்டுமென்றால் அவர் முப்தியிடம் போக வேண்டும். எல்லா ஆலிம்களிடத்திலும் கேட்கக்கூடாது. ஏனெனில் முப்தியானவர் மஸ்அலாக்களில் தேர்ச்சி பெற்றவராக உள்ளார். யாராவது ஆலோசனை கேட்காமலேயே ஆலோசனை சொன்னால் அவரது பேச்சை கவனத்துடன் கேட்க வேண்டும். அவரை இக்லாஸு உடையவர், நன்மை நாடுபவர் என்று நினைக்க வேண்டும். இவர் என் பேச்சை மதிக்கவில்லையென்று அவர் எண்ணிவிடக்கூடாது.

12. நபியுடைய அடிப்படைச் சட்டங்களை விட்டதால் விளைந்த கேடுகள்.

சங்கை மிகு ஹஜ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் உலகில் தீனைப் பரப்பிட சில அடிப்படைகளை நிர்ணயித்தார்கள். அந்த அடிப்படைகள் முழுமையாக உயிர் பெற்றிருந்தவரை அதன்படி உம்மத் நடந்தவரை வேலை செய்த வரை தீனுடைய ஒவ்வொரு பகுதியும் உம்மத்தின் ஒவ்வொரு தனி நபரிடம் சென்றடைந்து வந்தது. நூற்றுக்கு நூறு தீன் உலகில் பரவிக் கொண்டிருந்தது. கொஞ்ச காலத்திற்குப்பிறகு இஸ்லாமிய வட்டம் விசாலமடைந்து விட்டதாலும் ஏராளமான கூட்டங்கள் இஸ்லாத்தைத் தழுவியதாலும் சில இஸ்திம்பாத் (அடிப்படையை மையமாக வைத்து அதிலிருந்து சில விஷயங்களை எடுப்பது) தான வழிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம் உண்டானது. ஆனாலும் அந்த இஸ்திம்பாத்தான வழிமுறைகள் அடிப்படை சட்டங்களே காணாமல் போகுமளவு முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளதால் இந்த உம்மத்தின் மீது மூன்று விளைவுகள் ஒன்றன்பின் ஒன்றாய் ஏற்படலாயின.

முதல் விளைவு: தீன் முழு உம்மத்தையும் அடைவது நின்றுபோய் தனிப்பட்ட சில நபர்களே அதிலிருந்து பலனடைந்தனர்.

இரண்டாம் விளைவு: ஒவ்வொருவரும் தீனுடைய ஒரு பகுதியை தன் உழைப்பிற்காக குறிப்பாக்கிக் கொண்டனர். மேலும் அடிப்படை சட்டங்களின் வழியாக முழு தீனின் மீதும் உழைப்பு நடைபெறவில்லை.

மூன்றாம் விளைவு: அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு ஒரு துறையிலுள்ளோர் மற்ற துறையோருடன் மோதலாயினர். தீய எண்ணங்கொண்டார்கள். உதவியாளராக இருப்பதற்குப் பதிலாக போட்டியாளராகி விட்டனர். அதனால் தீனுக்கு ஏராளமான கேடுகள் உண்டாயின. ஆகவே அந்த அடிப்படைச் சட்டங்களுக்கு உயிர் கொடுத்து கண்முன்னே வைத்து நடப்பது அவசியம். அதற்குக் கீழே தான் இஸ்திம்பாத்தான வழிகள்.

13. நபி அமைத்த தர்த்தீபின் அடிப்படைச் சட்டங்கள்:

1. முதன் முதலாக நபி (ஸல்) அவர்கள் உம்மத்திலுள்ள ஒவ்வொருவரையும் தாயீயாக ஆக்கினார்கள். ஏழையோ, பணக்காரரோ, விவசாயியோ, வியாபாரியோ, ஒவ்வொருவரும் தீனுடைய தாயீ ஆக இருந்தார்கள். காரணம்? நூறு சதவீத உம்மத்தும் தஃவத் கொடுக்கும் போது தீனும் நூறு சதவீதம் மனிதர்களிடம் வந்துவிடும். ஒவ்வொருவரின் தஃவத்தும் அவரது இல்முடைய அளவுக்கேற்ப இருந்தது.

2. நபி (ஸல்) அவர்கள் தீனைக்கற்கவும், கற்பிக்கவும் அசலான மையப்பகுதியாக மஸ்ஜிதை ஆக்கினார்கள். ஸஹாபிகள் மஸ்ஜிதுக்கு வந்து தீனைக்கற்றுக் கொண்டிருந்தனர். அவர்களில் மூன்று பகுதியினர் இருந்தனர்.

முதல்பிரிவினர்: மனைவி, மக்கள், உலக ஈடுபாடுகள் அனைத்தையும் விட்டு நீங்கியவர்கள். இவர்கள் அஸ்ஹாபே ஸுஃப்பா (திண்ணைத் தோழர்கள்) வில் உள்ளவர்கள்.

இரண்டாம் பிரிவினர்: தன் வாழ்க்கைத் தேவைக்காக சாதாரண வேலைகளை ஏற்படுத்திக் கொண்டவர்கள்.

ஆனாலும் தங்களுடைய அதிகமான நேரத்தைத் தீனுக்காக ஒதுக்கியவர்கள்.இவர்களில் பெரும்பாலோர் "முஹாஜிரீன்" ஆவர்.

மூன்றாம் பிரிவினர்: அன்ஸாரிகள். இவர்கள் விவசாய வேலைகளிலும் மற்ற வேலைகளிலும் ஈடுபட்டிருந்தவர்கள். இவர்களில் சிலர் இரவை, சிலர் பகலை, சிலர் பாதிப் பகலை, சிலர் பாதி இரவை தீனைக் கற்றிட ஒதுக்கி யிருந்தனர்.

இஸ்லாத்தில் புதிதாக நுழைபவர்கள் அதிகமாகிக் கொண்டிருந்தனர். இறுதியில் குலபாயே ராஷிதீன்களின் காலத்தில் ஏராளமான நகரங்கள் வெற்றிகொள்ளப்பட்டன. மற்ற சமுதாயத்தினரும் இஸ்லாத்தில் நுழையலாயினர். அப்படியிருந்தும் பள்ளிக்கு வெளியே தீனைக் கற்க எந்தக்கட்டிடமும் இருக்கவில்லை. மாறாக பள்ளியையே விசாலப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. இதில் ஒரு பிரத்தியேகமான ரகசியம் என்ன தெரிகிறதென்றால் பள்ளியில் வைத்து எந்த ஒழுக்கங்கள் மனநிலைகளுடன் தீனைப் பெற முடியுமோ அது பள்ளிக்கு வெளியே நிச்சயம் நடக்காது. உதாரணமாக பள்ளியில் உலக விஷயங் களிலிருந்து பாதுகாப்பு, கேலி கிண்டலிலிருந்து பாதுகாப்பு, ஒலுவுடன் இருத்தல், திக்ருடைய மனிநிலை யுடன் இருத்தல், முதல் தக்பீர் உடன் தொழுகின்ற பேணுதல் போன்றவை தீனில் மதிப்பையும் உறுதியையும் உண்டாக்கி அமல் செய்யும் தவ்பீக்குக்கு வழிகாட்டுகிறது. (இது மூன்றாவது அடிப்படைச் சட்டம்)

3. தீனைக் கற்றுக் கொள்ள திருக்குர்ஆனின் முன்னிலைக்குரியவர்களான பெரியவர்களை அசலாகவும் பொறுப்பாளியாகவும் ஆக்கப்பட்டது. அவர்களிடம் நீங்கள் வியாபாரம், விவசாயத்தில் ஈடுபட்டிருப்பதால் இயலா மலிருக்கிறீர்கள். ஆகவே உங்கள் குழந்தைகளை எங்களிடம் அனுப்பி வையுங்கள். ஸுப்பா (திண்ணை)த் தோழர்கள்

அவர்களுக்கு தீனைக் கற்பிப்பார்கள்! என்று சொல்லவில்லை. அதற்கு மாறாக முக்கியத்துவத்துடன் பெரியவர்கள் அழைக்கப்பட்டார்கள். முதியவரோ, வாலிபரோ, விவசாயியோ, வியாபாரியோ தீனைக்கற்க அவரை ஊக்குவிக்கப்பட்டது. காரணமென்னவென்றால் தன் வீட்டிலும் தன் தொழிலிலும் தன் கொடுக்கல் வாங்கலிலும் பெரியவர்களே தீனைப் பேண முடியும். சிறியவர்களின் வேலையல்ல இது. சொர்க்க நரகத்தை யகீன் கொண்டு பெரியவர்களே நடக்கமுடியும்; சிறியவர்கள் அல்ல. மேலும் இறைக்கட்டளைகளின் மதிப்பை பெரியவரே விளங்க முடியும்.

4. கூலி வாங்காமல் தீனைக் கற்பதின் கற்பிப்பதின் அமைப்பை (நபி) உருவாக்கினார்கள். மேலும் ஒவ்வொருவரும் தனக்குக் கீழ் உள்ளவர்களுக்கு தனி பொறுப்பில் உள்ளவர்களுக்கு தீனைக் கற்பிக்கும் பொறுப்பாளிகளாக்கினார்கள்.

உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகள்: தன் பொறுப்பைப்பற்றி நாளை நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள் என்ற ஹதீஸ் இந்த விஷயத்திற்கு ஆதாரமாக இருக்கிறது. ஒவ்வொருவரும் தன் வீட்டில் தீனைக் கற்பித்து தன் பிள்ளைகளை கற்பிப்பவராக ஆக்கும் போது சம்பளம் பிரதியுபகாரம் என்ற கேள்விக்கு இடமில்லை. இவ்வாறு பொருளின்றியே ஒவ்வொருவரும் ஸஹாபிகளைப் போல தீனைக் கற்கவும் கற்பிக்கக்கூடியவராகவும் ஆகிவிடமுடியும்.

ஏனென்றால் உடலியல் வாழ்க்கைக்கு காற்றும் நீரும் எவ்வளவு அவசியமோ அதேபோல் மனிதர்களின் ஆத்மீக வாழ்க்கைக்கும் தீன் அவசியமானது. அல்லாஹு தஆலா நீரையும் காற்றையும் மனிதர்கள் அனைவருக்கும் இலவசமாகத் தந்துள்ளதைப் போல் எந்தப் பிரதி பலனுமின்றி தீனைக் கற்றலையும், கற்றுக்கொடுத்தலையும் வைக்கப்பட்டுள்ளது. ஏழை, மிஸ்கீன், அனாதை,

கிராமத்தில் வசிப்பவர், காட்டில் வசிப்பவர், மலையில் குடியிருப்பவர் ஒவ்வொருவரும் தீனைக் கற்க வேண்டும். தீனைக் கற்கவும், கற்பிக்கவும் சந்தா சேர்க்கப்படவில்லை. அதற்கு ஆர்வமூட்டப்படவில்லை. யாருக்கும் உணவு கட்டி கொடுக்கப்படவில்லை. உணவு கட்டிக் கொடுக்க யாரையும் தூண்டப்படவும் இல்லை. திண்ணைத் தோழர்களின் உணவு ஏற்பாடு அபூபக்ர் சித்தீக் அவர்களின் வீட்டிலிருந்து செய்யப்படவில்லை. உஸ்மான் அவர்கள் ஹஜ்ரத் அப்துர் ரஹ்மானிப்னு அவ்ப் அவர்களின் வீட்டிலிருந்து உணவு வரவில்லை. அவர்கள் நிம்மதியுடனிருக்க செல்வந்தர் களிடமிருந்து வசூல் செய்யப்படவில்லை. இதற்கு மாறாக திண்ணைத் தோழர்களுக்கு பசி பட்டினியுடனேயே தீனைக் கற்க வேண்டியிருந்தது. ஆதலால் அவர்களுடைய உள்ளங்களில் தீனுடைய மதிப்பும் முக்கியத்துவமும் பெருகிக் கொண்டிருந்தது. இம்மத்ரஸாவுக்குச் செலவு செய்வோர் மதீனாவில் ஏராளமானோர் இருந்தனர். கை காட்டினால் போதும் தங்கள் செல்வமனைத்தையும் செலவழித்துவிடுவார்கள். ஆனால் அப்படிச் செய்யப் படவில்லை. போரில் ஆயுதங்கள் வழிச் செலவுகள் இருப்பதால் அதற்காகவே பொருள் செலவழிக்க ஆர்வ மூட்டப்பட்டது.

தீனில் முதன் முதலில் ஈமானையும் பிறகு அக்லாக்கையும் கற்பிக்கப்பட்டது.

இதைக் கீழ்க்காணும் சம்பவம் உறுதிபடுத்துகிறது. அபிசீனியா மன்னர், ஹஜ்ரத் ஜஃபரிப்னு அபூதாலிப் அவர்களிடம் நபி அவர்கள் உங்களுக்கு எதைக் கற்பித்தார்கள்? என்று கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் கூறிய பதில்களைக் கவனிக்க வேண்டும். ஏனென்றால் அந்த நற்பண்புகளுடன்தான் சட்டங்களை நிறைவேற்ற முடியும். இல்லையென்றால் அல்லாஹு தஆலாவின் சட்டங்களை அமல் செய்வது லேசான காரியமல்ல.

இன்றைய காலத்தில் தீனைக் கற்கும் கற்பிக்கும் வழிமுறை மாறிப்போனதால் அமல் செய்வது கஷ்டமாக இருக்கிறது. மனிதனுடைய ஈமானிய சக்தி மறுமையுடைய (நினைவில் வைத்திருத்தல்) இஸ்திஹ்ளாருடன் வெட்ட வெளிச்சமாகி விட இவ்விரண்டு விஷயங்களையும் முதலில் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். நற்குணங்கள் உள்ளே வந்து விட்டால் குணம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளின் மீது விரோதமோ தர்க்கமோ ஏற்படாது. மாறாக ஸஹாபிகள் அவர்களைப் போல் பிரிவு. மஸ்அலாக்களில் கருத்து வேற்றுமை இருந்தாலும் ஒற்றுமை ஒன்றுபடுதல் பிரியம், நேசம் மரியாதை யாவும் நிலைத்திருக்கும்.

இந்த அடிப்படைச் சட்டங்களை நடத்தியவாறு அதற்கடுத்து இஸ்திம்பாத்தான துறையில் மத்ரஸாக்கள் கான்காஹ் (ஆன்மீகப் பள்ளிகள்) குழந்தைகளுக்கு கற்பிப்பது யாவும் மிகுந்த பலன் தருவதாக அமையும். இத்துறைகள் மிக அவசியமானதுதான். ஆனால் அடிப்படைச் சட்டங்களின் தேவையைவிட இவற்றின் தேவைகள் குறைவானதே. இன்று அடிப்படை விஷயங்கள் இல்லாத காரணத்தால் ஈமான் எவ்வளவு பலகீனமடைந்து விட்டதென்றால் பர்லுகளின் முக்கியத்துவம் நபில்களை விட மட்டமாகிவிட்டது. அதனால் தீன் அதற் குரிய மரியாதையுடன் முக்கியத்துவத்துடன் தவக்குல் தக்வா வுடன் கற்கப்படுவதில்லை. இந்த விபரீத விளைவு தான் தீன்தாரிகளிடையேயுள்ள கருத்து வேற்றுமைகள் இதர உலகியல் துறைகளிலுள்ளோரிடம் காணமுடியாத அளவு விரோதத்தின் எல்லைக்கே சென்றுவிட்டது.

14.தஃவத்துடைய மைதானத்தில் கற்றலும் கற்பித்தலும்

நாமும் ஸஹாபிகள் அவர்களின் தார்த்தீன்படி தஃவத்துடைய மைதானத்தில் நடந்தவாறே தீனைக் கற்றும் கற்பித்தும் வந்தால் இன்றைக்கும் தீனுடைய ஒவ்வொரு

பகுதியும் ஒவ்வொரு துறையும் நூறு சதவீதம் உம்மத்தில் உயிர்பெறும். அத்தோடு முழு தீனுக்கும் தாயியான ஒவ்வொரு நபரின் ஈமானிய உயிருக்கும் சக்தியூட்டி இல்மும் திக்ரும் ஒவ்வொரு மாடிவீட்டிலும், குடிசை வீட்டிலும், ஒவ்வொரு சீரான உள்ளத்திலும் தன்னுடைய மதிப்புடன் நுழைய முடியும்.

15. ஈமானுடைய சிபத்துகள்

ஈமானியப் பண்புகளற்ற அமல்கள் பலகீனமானதும் உயிரற்றதுமாகும். தக்வா, தவக்குல் உலகப்பற்றற்ற தன்மை, போதுமென்ற மனநிறைவு, பொறுமை, நன்றி, நேசம் ஆகிய குணங்களே ஈமானிய சிபத்துகளாகும். இந்த அமல்களின் தன்மைகள் ஒளிவிடும்போது அழகிய நல் அமல்கள் உருவாகிறது. மேலும் ஆர்வங்கொள்ளும், அச்சங் கொள்ளும் மனநிலைகள் உண்டாகிக் கொண்டேயிருக்கும். இப்பண்புகள் முஸ்லிமுக்குள் உருவாவது நின்றுவிட்டால் பிறகு அமல்கள் செய்வது கஷ்டமாகிவிடும். சாலிஹான அமல்கள் மீது யகீன் உண்டாவதற்கு பதிலாக உலக வஸ்துக்களின் யகீன் உருவாகிக் கொண்டிருக்கும். பிறகு தீனைவிட துன்யா உயர்ந்து கொண்டே செல்லும். மனிதனது உள்ளத்தையும், மூளையையும் உலகம் எந்தளவு ஆக்ரமித்து அவன் மனதில் மதிப்பையும் பிரியத்தையும் உண்டாக்கிவிடுகிறதென்றால் இதற்கு முன்னால் பர்லுகளை நிறைவேற்றுவதைக் கூட, பொருட் படுத்தமாட்டான். எனவே ஸஹாபிகளின் வழிமுறை ஈமானியப் பண்புகளை உண்டாக்கக் கூடிய வழிமுறை யாகும். மேலும் இந்தப் பண்புகளால்தான் ஒரு முஃமின் இன்னொரு முஃமினுக்கு உயர்ந்த அந்தஸ்துள்ள வனாகிறான். செல்வந்தர், ஏழைகளுக்கும், ஏழை, செல்வந் தருக்கும் உதவியாளனாகிறான். ஒவ்வொருவருக்கும் தான் பிறருக்கு செலுத்த வேண்டிய கடமைகளைப்பற்றிய சிந்தனையும் வளர்கிறது.

16. நம்முடைய உஸூல் மீறல்கள் தடைகளாக இருக்கின்றன:

மன்னிப்புக் கேட்டல் மன்னித்துவிடுதல் இரண்டும் அல்லாஹு தஆலாவுக்கு மிகப் பிரியமானது. இவ்விரண்டு தன்மைகளும் முஸ்லிமுக்குள் வந்துவிட்டால் அல்லாஹு தஆலா அவனை மன்னிப்பவனாகவும், சங்கைப்படுத்து பவனாகவும் ஆகிவிடுகிறான். இந்த தஃவத் பணியால் என்ன நாடப்படுகிறது? இதைச் செய்தால் என்ன பலன்கள் கிடைக்கும்? என்ற விஷயம் ஜனங்களுக்குத் தெரிந்து விட்டால் அவர்கள் பொது மக்களோ முக்கியஸ்தர்களோ ஒவ்வொருவரும் இம் மைதானத்தில் நடைபோட தன் ஆயுள் முழுவதையும் அர்ப்பணிக்கத் தயாராகி விடுவார்கள். ஆனால் தகுதியற்ற நம்மால் நம் விஷயத்தை விளங்க வைக்க முடியவில்லை. நம் பரம எதிரி ஷைத்தான், தீமையை ஏவும் நப்ஸ் இவ்விருவரும் நாம் சரியான பாதையில் தஃவத் கொடுப்பதற்கு தடையாக உள்ளனர். இந்த தஃவத் திருப்பணி எதிரியையும் நண்பனாக்கிவிடும். ஆனால் நாம் உஸூல்களில் சிலவற்றைப் பேணாததால் நம்மைச் சேர்ந்தவரும் ஆகாதவராகிவிடுகிறார். நாம் விஷயத்தை விளங்கவே இல்லை. ஹிக்மத்தையும் ஆளறிந்து பேசுதலையும் முன்னால் வைத்தவாறு நாம் நடப்போமேயானால் இன்ஷா அல்லாஹ் ஒவ்வொருவரும் நம்மவராகிக் கொண்டிருப்பார்கள்.

17. இக்ராம் முஸ்லிம் மிகப்பெரிய ஆயுதம்!

இக்ராம் முஸ்லிம் விரோதிகளைப் பணியவைக்கும் மிகப்பெரிய ஆயுதமாகும். ஆனால் அதைச் செயல்படுத்த உள்ளத்துடன் பெரிய போராட்டம் நடத்த வேண்டியிருக்கும். எதிராளியின் சாபத்தையும் பழிப்பையும் சகித்து அவரது இடையூறுகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். இதனால் நாமும் பக்குவமடைகிறோம். மற்றவர்களும் பக்குவமடைகின்றனர்.

وَ لَا تَسْتَوِى الْحَسَنَةُ وَلَا السَّيِّئَةُ اِدْفَعْ بِالَّتِى هِىَ اَحْسَنُ

நல்லதும் கெட்டதும் சமமாகாது. நல்லவை மூலம் பகரங் கொடுப்பீராக! *அல்குர்ஆன்*

இந்த ஆயத்தை எல்லா நேரமும் கண்முன்னால் வைத்திருக்க வேண்டும். நாம் எந்த முஸ்லிமையும் மாற்றுக் கருத்துள்ளவனாகவும் தீனுக்குப் பதிலடி தருபவனாகவும் கருதாமல் நம் பேச்சை இவர் ஒப்புக் கொள்ளாததற்கு பல சூழ்நிலைகள் தடையாக உள்ளன என்றெண்ண வேண்டும்.

18. ஒப்புக் கொள்ளாததற்குக் காரணம்!

இதே தீனுடைய விஷயத்தை இவர் அபிமானமும் நேசமும் வைத்திருக்கும் ஒருவர் இவருக்குச் சொல்லும் போது இவர் அதை ஏற்றுக் கொள்கிறார். இதன் மூலம் இவர் தீனுக்கு மாற்றமானவரல்ல. நம்முடைய நிலமைகளினால் நம்மைக் கண்டு பயப்படுகிறார். நம்மால் ஏமாந்துவிடக்கூடாது என்பதற்காக நம் பேச்சை ஏற்கத் தயங்குகிறார் என்பது தெரிகிறது. உண்மையில் பார்க்கப் போனால் கலிமாச் சொன்ன எந்தவொரு முஸ்லிமும் இது அல்லாஹு அவனது ரஸூல் அவர்களுடைய பேச்சுதான் என்ற யகீன் வந்துவிட்டால் பிறகு அல்லாஹு அவனது ரஸூல் அவர்களுடைய பேச்சை மறுத்துவிட மாட்டான். என்றாலும் காலத்தின் கோலம் ஜனங்களை ஏமாற்றத்தில் போட்டுவிட்டது. ஏனென்றால் வெளிப்படையில் மலக்குகளைப் போன்று பண்புகளுள்ள பலர் தீனைக் காட்டியே துன்யாதாரிகளை ஏமாற்றி தனக்குக் கண்ணியத்தையும் தன்னுடைய உலக ரீதியான முன்னேற்றத்தையும் உண்டாக்க முயற்சி செய்தார்கள்.

இதனால் உலகமே பயப்படுகிறது. பாலால் சூடுபட்டுக்கொண்டவன் மோரையும் ஊதி ஊதிக் குடிப்பான் என்ற பழமொழி பிரபலமானது.

19. பாக்கியமிழப்பதற்கான காரணங்கள்:

ஒரு விஷயத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்; நம்மை நாமே விளங்கியவர்களாக நாம் விளங்கக் கூடாது; எதற்காக வென்றால் நாம் இதை விளங்கிக் கொள்ள முயன்று கொண்டிருக்கவும் உயர்வடைந்து கொண்டிருக்கவும் வேண்டும். எப்பொழுது மனிதன் தன்னை முழுமையானவன் எனக் கருதுகிறானோ அப்பொழுதே அவனது முன்னேற்றத்தின் வழி அடைபட்டுக் போய்விடுகிறது. அத்தோடு ஷைத்தான் அங்கிருந்தே அவனது வீழ்த்தத் தொடங்கிவிடுகிறான்.

இல்யாஸ் (ரஹ்) அவர்களின் பொன்மொழியொன்று; இவ்வேலை செய்வோருக்கு இரண்டு விஷயங்கள் ஏற்பட்டுவிடுவதைப் பயப்படுகிறேன். (1) அவர்கள் வேலை செய்யாமலிருக்க நாம் வேலை செய்துகொண்டிருக்கிறோம் என்று விளங்கிக் கொள்வது. இந்த ஆறு விஷயங்களையும் தன்னுள் கொண்டு வருவதற்குப் பெயர்தான் வேலை. ஆறு நெம்பரும் நம்முள் வந்திருந்தால் நாம் வெற்றி பெற்றவர்கள்; நாம் வேலை செய்து வருகிறோம். இவ்விஷயங்கள் நமக்குள் வரவில்லையென்றால் எத்தனையோ மக்கள் நம் பேச்சை வரவேற்றாலுமென்ன? நம்முடைய வேலை நடக்கவில்லை (என்று தான் அர்த்தம்).

2. காரணிகள் இருக்கும்போது காரணிகளின் மேல் பார்வை செல்லாமலிருப்பதென்பது கஷ்டமான விஷயம் தான். ஆனால் காரணிகள் மேல் பார்வை சென்றுவிட்டால் அல்லாஹு தஆலாவின் உதவி அகன்று விடுகிறது.

அடியேன் சிந்தித்த பிறகு ஒரு விஷயம் விளங்கியது. அதாவது ஒரு மனிதருடைய பார்வை தன்மேல் விழுந்து நான் ஏதோ கொஞ்சம் செய்து வருகிறேன். என்னால் தஃவத் பணி நடக்கிறது என்ற நினைப்பு வந்துவிட்டால் அது ஒரு பகுதியிலோ, அல்லது முழு உலகிலோ

இருந்தாலும் சரியே. அவர் நான் இதைவிட்டும் விலக்கப் பட்டவனாகிவிடக்கூடாது என்பதற்காக அல்லாஹு தஆலாவைப் பயப்பட வேண்டும். இவ்வாறு நடந்ததை கண்கூடாகப் பார்க்கப்பட்டுள்ளது. மக்களின் பார்வை ஒரு மனிதர் மீது விழுந்து இவரால் தஃவத்துடைய வண்டி ஓடுகிறது என நினைப்பார்களேயானால் அல்லாஹு தஆலா அம் மனிதனை அவர்களிலிருந்து தூக்கிவிடுவான். இதுவும் பார்க்கப்பட்டுள்ளது. ஏனென்றால் இவ்விரண்டு விஷயங்களும் காரணிகள் மீது நம்பிக்கை வைத்ததினால் நடந்தவையாகும். உண்மையில் அல்லாஹு தஆலாதான் செய்து கொண்டிருக்கிறான். சில சமயத்தில் காரணிகளுடன் சில சமயத்தில் காரணிகள் இன்றிச் செய்கிறான். எல்லா நேரமும் பார்வையும் உள்ளமும் அல்லாஹு தஆலாவின் பக்கமே இருக்க வேண்டும். மேலும் இந்த விஷயத்தையும் பார்க்கப்பட்டுள்ளது. அதாவது தீனுடைய ஒரு காரியத்தை பரிகாசமாகக் கருதப்பட்டால் கேலி செய்பவன் பெரும் அபாயத்தில் வந்து விழுந்து விடுகிறான். எந்தளவுக் கென்றால் சில சமங்களில் அவனது ஈமானில் கடுமையான காயத்தை உண்டு பண்ணும் செயல்களைச் செய்து விடுகிறான். அல்லது அத்தகைய பேச்சுக்களை பேசி விடுகிறான்.

ஆட்சேபணையைத் தவிர்த்தல்:

மேலும் பிறர் மீது ஆட்சேபணை தெரிவிப்பது இந்த தஃவத்துடைய சுபாவத்திற்கு மாற்றமான விஷயமாகும். பெரிய ஹஜ்ரத் ஜீ (ரஹ்) அவர்கள் ஆட்சேபிப்பது ஹராம் சீர்திருத்துவது பர்லு எனக் கூறியுள்ளார்கள். ஆட்சேபணை தெரிவிப்பது குழப்பத்தின் பக்கம் இழுத்துச் செல்கிறது. மேலும் உள்ளத்தில் விரோதத்தையும் உண்டு பண்ணுகிறது. சீர்திருத்தம் செய்வது உம்மத்துடைய கவலை, துக்கத்தின் பக்கம் அழைத்துச் செல்கிறது. இன்று நம்மிடமிருந்து வெளியேறிவிட்ட உம்மத்தைப் பற்றிய கவலை துக்கத்தை

அதிகப்படுத்த வேண்டியுள்ளது. நமக்குள் நாளுக்கு நாள் பெருகிவரும் ஆட்சேபணைக்குரிய காரணிகளைவிட்டும் நாம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஆட்சேபணைகளின் காரணத்தால்தான் இன்று உம்மத் துண்டு துண்டாக ஆகிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரும் உம்மத்தைப் பற்றி கவலைப்படுபவர்களாக ஒவ்வொருவர் மீதும் இரக்கப்படுபவர்களாக ஆகிவிட்டால் இந்த தஃவத் பணி நடக்கும். அதுமட்டுமல்ல இந்த தஃவத் பணியில் நடந்து செல்கையில் பிறரது ஆட்சேபணைகளுக்கு பதிலும் தரக்கூடாது. எழுத்து மூலமும் அல்ல, பேச்சு மூலமும் அல்ல, மறைமுகமாகவும் அல்ல, நேரிடையாகவும் அல்ல, இந்தக் காரணத்தினாலும் குரோதத்தின் வாசல் திறக்கிறது. இதற்கு மாற்றமாக ஆட்சேபிப்பவர்களை சங்கை (இக்ராம்) செய்து வேலைக்கு நெருக்கமாக்க வேண்டும். நம்மை பற்றிய பிரியத்தை உண்டாக்க வேண்டும். அதன் பிறகு ஆட்சேபணை தானாகவே நீங்கிவிடும். விஷயத்தை விளங்குவது எளிதாகிவிடும்.

20. ஆட்சேபணைக்கும் சந்தேகத்திற்குமிடையே உள்ள வித்தியாசம்!

ஆட்சேபணைக்கும், சந்தேகத்திற்குமிடையே வித்தி யாசம் உண்டு. எனக்கு இதைப்பற்றித் தெரியாது என்று தன் அமலை ஒப்புக் கொள்வதோடு, கேள்வி கேட்கப் படுபவரின் மதிப்பையும் ஒப்புக்கொள்ளும் நிலையுடன் சந்தேகம் எழுகிறது. ஆனால் ஆட்சேபணையில் எனக்குத் தெரியுமென்ற வாதமும் கேள்வி கேட்கப்படுபவர் அறியாதவர் என்ற எண்ணமும் உள்ளது. ஆகையால் விஷயத்தை விளங்க சந்தேகங் கேட்கலாம். ஆனால் சிற்சில சமயங்களில் மனிதன் ஆட்சேபணையை சந்தேகமென விளங்கிக் கொள்கிறான். நான் சந்தேகந்தான் கேட்கிறேன் என்கிறான். இது ஷைத்தானுடைய ஏமாற்று வேலையாகும்.

21: ஹிக்மத்:

இவற்றோடு இந்த தஃவத்தில் ஹிக்மத்தையும் கற்றுக் கொள்ள வேண்டும். இது விஷயங்களை விளங்க உதவியாக இருக்கும். உண்மையில் ஹிக்மத்தென்பது அல்லாஹுˇ தஆலாவின் கொடையாகும். தான் நாடிய வருக்கு அதைக் கொடுக்கிறான். இதைத்தான் அல்லாஹுˇ தஆலா

وَمَنْ يُّؤْتَ الْحِكْمَةَ فَقَدْ اُوْتِىَ خَيْرًا كَثِيْرًا

ஹிக்மத் கொடுக்கப்பெற்றவர் பெரும் பாக்கியம் பெற்றவர் என்ற ஆயத்தில் சுட்டிக் காட்டுகிறான். என்றாலும் இது வெறும் கொடைமட்டுமல்ல. இன்னொரு ஆயத்தில்

وَيُعَلِّمَ الْكِتَابَ وَالْحِكْمَةَ

கிதாபையும், ஹிக்மத்தையும் கற்பிப்பார் என்று கூறப்படுவது போல் ஹிக்மத்தின் தொடர்பு கற்பதோடும் இருக்கிறது. எவ்வாறு வேதத்தைக் கற்கப்படுகிறதோ அவ்வாறே ஹிக்மத்தும் கற்கப்படுகிறது. ஆனால் இந்த ஹிக்மத் எவருக்குள் பரிசுத்த குணங்கள் உருவாகி இச்சையுள்ள குணங்கள் மிகைக்கப்படுமோ அவருக்குக் கிடைக்கும். ஆகவே ஹிக்மத்தின் மூலம் ஜனங்களுடைய உள்ளங்கள் ஹக்கிற்காக திறந்து கொள்ள அல்லாஹுˇ தஆலாவின் புறத்திலிருந்து உதவி இறங்க துஆச் செய்ய வேண்டும். இல்லையென்றால் வார்த்தை ஜாலங்களாலான ஹிக்மத் முனாபிக்கின் நாவில் கூட தவழ்ந்து கொண்டிருந் தது. பிறகு

اَلْسِنَتُهُمْ اَلْسِنَةُ الْحُكَمَاءِ وَ قُلُوْبُهُمْ قُلُوْبُ
الْمُنَافِقِيْنَ وَالْاَعَاصِمِ

அவர்களின் நாவுகள் நுண்ணறி வாளர்களின் நாவுகளைப் போலும் அவர்களின் உள்ளங்கள் முனாபிக் குகள் மாறு செய்வோரின் உள்ளங்களைப் போலும் உள்ளன என்ற பொன் மொழிக்குரியவர்களாக ஆகி விடவேண்டி யிருக்கும்.

22. பணிவு:

இந்தத் தஃவத் பணியில் பணிவும், தாழ்மையும் அதிகரிக்கும் அளவு தன்னுடைய அறியாமை விளங்கிக் கொண்டிருக்கும்.. அறியாமைக்குப்பின் இல்மின் வாசல் திறந்து கொண்டிருக்கும். காரணம்? இதன் மூலம் உண்மையான தேட்டம் உருவாகிறது. தேட்டமே ஒவ்வொரு பொருளின் வாசலையும் திறக்கிறது.

23. பெரியார்களின் சகவாசமும் மஷ்வராவும்:

மேலும் தன்னுடைய பெரியோர்களின் மேற்பார்வை யில் செல்லாத மனிதரை ஷைத்தான் கெடுத்துவிடுகிறான். இப்படிப்பட்ட மனிதர்களால்தான் உலகில் பெரும் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டன. நபி (ஸல்) அவர்கள் அல்லாஹுˇ தஆலாவின் கண்காணிப்பின் கீழ் நடந்து கொண்டிருந் தார்கள். ஹஜ்ரத் ஜிப்ரயீல் மற்றும் தன்னுடைய தோழர் களின் ஆலோசனைப்படியும், சங்கைமிக்க குர்ஆனில்

وَ شَاوِرْهُمْ فِى الْاَمْرِ

அவர்களுடன் ஆலோசிப்பீராக! என்று கூறப் பட்டதைப் போல நடந்துவந்தார்கள். இதேபோலவே ஸஹாபிகள் அவர்களும் பரிசுத்த குர்ஆனில்

وَ اَمْرُهُمْ شُوْرٰى بَيْنَهُمْ

அவர்கள் தங்களுக்கிடையே ஆலோசிப்பார்கள் என்று கூறப்பட்டதைப் போல நபி அவர்களின் கண்காணிப்பின் கீழ் நடந்து வந்தனர். இவ்வாறே பின்னால் வருவோர்

தமக்குமுன் வந்தோரின் கண்காணிப்பில் நடப்பவர்களாக இருந்தனர். இதனால் உம்மத் ஒன்று மற்றொன்றுடன் இணைந்திருந்தது, ஒன்றுபட்டிருந்தது, ஹிதாயத் பெற்றதாக இருந்தது. இவ்விரண்டு பலன்களும் இவ்விஷயத்தால் விளைந்தன. ஆனால் இப்பொழுதைய நிலை? எப்பொழுது நாம் நம் பெரியார்களின் கண்காணிப்பிலும் மஷ்வராப்படி நடப்பதையும் விட்டு விட்டோமோ அப்போதிருந்தே சிதறி விட்டோம். வழிகேட்டின் பாதையில் நடக்கத்தொடங்கினோம். ஒவ்வொருவரும் தன் யோசனையே சரியானது என்றெண்ணத் தொடங்கினோம். இது மிகப்பயங்கரமான அபாயமாகும். ஷைத்தான் தன் யோசனையை சரியெனக் கருதியதால் அல்லாஹ்வின் கட்டளையைக் கூட ஏற்க வில்லை.

நாங்கள் இல்யாஸ் (ரஹ்) அவர்களிடமிருந்த சகவாச அருளாலும் அவர்களது பேச்சை நேரிடையாகக் கேட்டதாலும் அனைத்து உசூலையும் நாங்களே எடுத்துக் கொண்டோம். நாங்கள் யாருடைய மஷ்வராவிற்கும் தேவையுடையவர்கள் அல்லர். அல்லது பெரியார்களின் கண்காணிப்பிற்கும் தேவையுள்ளவர்கள் அல்லர் என்று சொல்வது பெரிய முட்டாள்தனமும் பெரும் அபாயத் திற்குரிய விஷயமுமாகும். இத்தகைய மனிதன் உம்மத்தை ஒன்று சேர்க்கவும்மாட்டான். அவர்களுடன் ஒன்று சேரவும் மாட்டான். இந்த தஃவத் பணியில் இரண்டே இரண்டு பெரிய வேலைகள் உள்ளன. ஒன்று ஹக்கில் இணைப்பது மற்றொன்று ஹக்கில் இணைவது.

24. ஆறு நெம்பரும் வேலையும்:

இந்த ஆறு நெம்பரும் குர்ஆன் ஹதீஸில் நேரடியாகக் கூறப்படவில்லையென்றாலும் இவை குர்ஆன் ஹதீஸி லிருந்து எடுக்கப்பட்டவையாகும். சீரான அறிவும் யகீனு முள்ளவர் எவரும் இவற்றை மறுக்க முடியாதபடி இதை ஆட்சேபிக்கவும் இடந்தராத நிலையில் உள்ளவை யாகும்.

இதைச் செயல்முறையில் கொண்டுவர மேற்கொள்ளப் பட்ட வழிமுறை உதாரணமாக கஷ்த் தஃலீம்ஹல்கா அமைத்தல், வெளியே கிளம்புதல் போன்றவைகளைக் கவனித்தால் இரண்டு விஷயங்கள் தெளிவாகத் தெரியும்.

முதலாவது உள்ளங்களின் ரூட் அல்லாஹு தஆலாவின் பக்கமும் மறுமையின் பக்கமும் திரும்புகிறதா இல்லையா? என்று பார்க்கும் போது இந்த அமைப்பில் நடைபோடுகிறவரின் திசையை அல்லாஹு தஆலா தன் பக்கம் திருப்பிவிடுகிறான் என்பது அனுபவப்பூர்வமாக எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகிவிட்டது.

இரண்டாவது இச் செயல்முறையால் பணிவு, புகழுக்குரிய பண்புகள் போன்றவைகள் உருவாகின்றன. ஆனால் இது எப்போது நடக்குமென்றால் எப்போது அல்லாஹு தஆலாவுக்காகவும் உசூலைப் பேணியும் வெளியே புறப்பட்டு இடையே எந்த உலகாதாயமும் வராமல் வெளிக்கிளம்பிய பின் நம் நேரங்களை சரியான வழியில் அமீருக்குக் கீழ்படிந்து கழிக்கிறோமோ அப்போது தான்.

25. சோதனை உயர்வுக்குரிய வழியே:

சில சமயங்களில் அல்லாஹு தஆலா இவ்வேலையைச் செய்பவர்களுக்கு சோதனைகளை உருவாக்குகிறான். இவை வேலை செய்யக்கூடியவர்களுக்கு உதவி ஒத்தாசை மற்றும் நுஸ்ரத்துடைய வாசல்களைத் திறந்துவிடக் கூடிய வையாகும். சில நேரங்களில் சோதனைகள் வராமல் மறை முக உதவி வருவதில்லை.

وَلَنَبْلُوَنَّكُمْ بِشَيْءٍ مِنَ الْخَوْفِ (البقرة)

اَمْ حَسِبْتُمْ اَنْ تَدْخُلُوا الْجَنَّةَ

போன்ற குர்ஆனுடைய ஆயத்துகளும் ஸஹாபிகள் (ரலி) அவர்கள் சோதனைக்குள்ளான பரீட்சிக்கப்பட்ட மைதானமும் இதற்கு ஆதாரமாக இருக்கின்றன. மேலும் சோதனைகளால் நற்குணங்களில் உயர்வு கிடைக்கிறது. காரணிகள் மேலுள்ள யகீன் நீங்குகிறது. ஹிக்மத்துடைய திரை திறக்கப்படுகிறது. பஸீரத் (அகப்பார்வை) பெருகுகிறது. மறைமுக ஏற்பாடு விளங்குகிறது. நம் அறிவுக்கு எட்டாத பெரிய நுட்பங்கள் அல்லாஹு தஆலா இதற்குள் மறைத்துவைத்துள்ளான். என்றாலும் நம்முடைய பலகீனம் இயலாமையால் துஆக்களும் வேதனைக்குரல் எழுப்புதலும் எவ்வளவு அதிகரிக்க வேண்டுமென்றால் நம்மையறியாமலேயே நம் நாவிலிருந்து

مَتٰى نَصْرُ اللّٰهِ

(அல்லாஹ்வின் உதவி எப்போது வரும்?) வந்துவிட வேண்டும். வெறுங் கஷ்டத்தால் அல்ல: நிம்மதியின்மை நிலை குலைவுடன் நாம் நாடாமலேயே நாவிலிருந்து இந்த வார்த்தைகள் வெளிப்படவேண்டும். இதற்கு பதிலாக

اَلَا اِنَّ نَصْرَ اللّٰهِ قَرِيْبٌ

(கவனம்! அல்லாஹ்வின் உதவி நெருக்கத்தில்தான் இருக்கிறது) என்று வரும். சோதனைகள் முடிந்தவுடன் அபாயகரமான பள்ளங்கள் வரத்தொடங்குகின்றன. மேலும் யகீன் குறையத் தொடங்குகிறது.

பெருமானார் (ஸல்) அவர்களின் 23 வருடகாலமும் சோதனைகளிலும் சிரமங்களிலுமே கழிந்தது. இவ்வாறே அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் கிலாபத்துடைய காலமும் சோதனைகளில் கழிந்தது. கிலாபுத்தே பாரூக்கியில் அச்சிரமங்களும், சோதனைகளும் முடிவுக்கு வந்தன. அதனால் கொஞ்சம் சமாளிக்க முடிந்தது. இதற்கு முன்பு அல்லாஹுவிடமிருந்து வந்த சோதனைகளும்

சிரமங்களுமே கவசத்துடைய வேலையைச் செய்து கொண்டிருந்தன. அதே போல் நாம் மௌலானா இல்யாஸ் (ரஹ்) அவர்களின் காலத்தைப்பற்றி கொஞ்சம் கேட்டுள்ளோம். கொஞ்சம் பார்த்துள்ளோம். அதுவும் எத்தனையோ சோதனைகள், சிரமங்களுக்கு ஆளாகியிருந்தது. மக்களிடம் பொதுவான வரவேற்பு இல்லை. மிகவும் அரிதாகவே மூன்று நாட்களுக்காக யாரேனும் புறப்படுவர். பாராட்டுபவர்கள் அங்கொன்றும் இங்கொன்றும் கெட்ட எண்ணங்கொள்பவர்கள் அதிகம். எந்தளவுக்கென்றால் ஆலிம்களும் அவநம்பிக்கையை ஊட்டிவிட்டனர். அல்லது ஐயங்களைத் தெரிவித்து வந்தனர். ஏராளமான ஆட்சேபணைகளை கூறிவந்தனர். ஜமாஅத்துகளுக்கு வரவேற்பும் இருக்காது. சாப்பாட்டுடைய தஃவத்தும் இருக்காது. அதுமட்டுமல்லாது தங்கள் பள்ளிகளில் ஜமாஅத்தினர் தங்குவதையும் சகித்துக்கொள்ளாதிருந்தனர். பைதல் (நடை) ஆக நடத்தல், சுண்டல் உண்ணுதல், இலைகளைச் சாப்பிடுதல் இவற்றுடன் பேச்சைக் கேட்க யாரும் தயாராகாமல் இருத்தல் இவையெல்லாம் பெரும் சோதனையாக இருந்தன. ஆனால் இன்று உமர் பாரூக் அவர்களின் காலத்தைப் போல் வரவேற்பு இருக்கிறது. தஃவத்துடைய வளர்ச்சியால் எல்லாவித ஆசைகள் சுகங்களை அனுபவிக்கும் வாய்ப்பும் இருக்கிறது. என்றாலும் இக்காலத்திலும் பெரும் பெரும் சம்பாத்தியங்களை விட்டுவிட்டு சுகபோகமான வசதிகள் நிறைந்த வீட்டுடைய அனுகூலங்களைவிட்டு புறப்படுவதென்றும் சாமான்யமான காரியமல்ல. அக்காலத்தில் ஓய்வு அதிகமிருந்தது. இக்காலத்தில் வேலைகள் அதிகமிருக்கிறது. இதுவும் ஒருவகையான குர்பானிதான். முந்திய காலத்தில் வேலை குறைவாகயிருந்ததால் திக்ரு செய்வதற்கும் தஹஜ்ஜுத் தொழுவதற்கும் நேரங் கிடைத்துக் கொண்டிருந்தது. இன்று வேலை அதிகம். ஜமாஅத்துகளின் பணிகள், தஷ்கீல், ரவாங்கீ, வாபஸீ போன்றவை நேரங்களை எவ்வளவு

ஆக்ரமித்துக் கொண்டதென்றால் திக்ரைப் பூர்த்தியாக ஓதுவதும் இரவில் தஹஜ்ஜுத் தொழுவதும் கஷ்டமாகி விட்டது. இதொரு இயல்பான விஷயந்தான். இதற்காக மனந்தளர்ந்துவிட வேண்டியதில்லை.

26. வேலை பரவுவதே ஆழத்திற்குக் காரணம்!

வேலையை அகலப்படுத்துவதில் ஈடுபடாமல் ஆழத்தை உண்டுபண்ணுவதில் ஈடுபடுங்கள் என்றொரு வாசகம் இன்று மக்களுடைய நாவுகளிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது. அடியேனுக்கு இது ஷைத்தானுடைய சூழ்ச்சியெனத் தெரிகிறது. ஏனென்றால் குலபாயே ராஷிதீன்களின் காலத்திலோ, தாபியீன்கள், தபஉத்தாபியீன் களின் காலத்திலோ, அகலத்தை உண்டு பண்ணாமல் ஆழத்தை உண்டு பண்ணுங்கள் என்ற வாசகம் சொல்லப் பட்டது கிடையாது. அவ்வாறில்லை யென்றால் தஃவத்து டைய சுபாவமென்னவென்றால் அகலப் படுத்துவதோடு தம்மால் முடிந்தளவு ஆழப்படுத்தவும் முயற்சிக்க வேண்டும் என்பதே! ஏனென்றால் அகலப்படுத்துவதை விட்டுவிட்டு ஆழப்படுத்துவதில் மூழ்கிவிட்டால் தஃவத்தே மறைந்து போய்விடும். உலக வேலைகளில் உள்ளோரும் தங்களு டைய வேலைகளில் இத்தகைய முயற்சியை மேற்கொள்ள வில்லை. மாறாக அவர்களுடைய தயாரிப்புகளை பரப்பு வதில் முயற்சிகள் அதிகமாகிக் கொண்டு இருக்கிறது. அதே சமயம் அதன் ஆழம் குறைந்து கொண்டேபோகிறது.

அகலம் அதிகரிக்கும் போது ஆழத்தில் குறைவு உண்டாகுமென்பது இயற்கையான ஏற்பாடே. உமர் அவர்களின் காலத்தில் புதிது புதிதாக நகரங்கள் வெற்றி கொள்ளப்பட்டு, நாலா திசைகளிலும் இஸ்லாம் பரவிய போது ஆழமான நிலையில் குறைவு ஏற்பட்டுவிட்டது. ஜனங்களின் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றிய மனோ நிலையும் குறைந்து விட்டது.

لاَ يَسْتَوِىْ مِنْكُمْ مَنْ اَنْفَقَ مِنْ قَبْلِ الْفَتْحِ وَ قَاتَلَ

உங்களில் யாரும் (மக்கா வெற்றிக்கு முன் செலவிட்டும் ஜிஹாதும் செய்தவருக்கு சமமாக முடியாது) என்ற ஆயத்தே இதைக் குறிப்பிடுகிறது. அதாவது மக்கா வெற்றிக்குமுன் ஆழம் இருந்தது. அதில் (இப்போது) குறைவு ஏற்பட்டுவிட்டது. இதில் இன்னொரு விஷயத்தை யும் சூசகமாகக் கூறப்பட்டுள்ளது. அதை எல்லோராலும் விளங்கமுடியாது. மாறாக பெரும்பாலோருக்கு சந்தேகந் தான் வரும். அதாவது அகலப்படுத்துவதை நிறுத்திவிட்டு ஆழமாக்குவதில் மூழ்கிவிடுவது. தஃவத்துடைய சுபாவ மல்ல. தஃவத் நடைபெறும்போது நிச்சயம் அகலம் ஏற்படும். அகலப்படுத்துவதற்குத்தான் தஃவத்தே. புதிதாக யார் இஸ்லாத்தில் நுழைவார்களோ அல்லது தஃவத்தில் கலந்து கொள்வார்களோ அவர்களின் ஆழமான நிலை பழையவர்களைப்போன்று இருக்காது

لاَ يَسْتَوِىْ مِنْكُمْ مَنْ اَنْفَقَ

என்ற ஆயத்தில் இரு பிரிவினரையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. குலபாயே ராஷிதீன்களுடைய காலகட்டமும் இந்த வித்தியாசத்தைக் கூறுகிறது. ஹஜ்ரத் அபூபக்ர் சித்தீக் அவர்களின் காலத்திலிருந்த ஆழமான நிலை, ஹஜ்ரத் உமர் அவர்களின் காலத்தில் இருக்கவில்லை. அவர்களின் காலத்தில் இருந்த நிலை ஹஜ்ரத் உஸ்மான் அவர்களின் காலத்தில் இருக்க வில்லை ஆனால் உலகின் கடைக்கோடி வரை இஸ்லாம் பரவிக்கொண்டிருந்தது. ஆகவே அகலத் தைவிட ஆழத்தில் கவனம் செலுத்துங்கள் என்ற மந்திரத் தில் மக்கள் மயங்கி ஏமாந்துவிடக்கூடாது. இருந்தாலும் வேலை செய்யக் கூடியவர்களுக்கு தங்களுக்குள் புகழுக் குரிய பண்புகள் யகீனை அதிகப்படுத்த முயற்சித்துக்

கொண்டு செல்ல வேண்டுமென்பதை நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

27. நபிமார்களின் அரசியல்:

இதிலொரு (அதாவது இவ்வேலையில்) முக்கியமான நிபந்தனையென்னவென்றால் தற்காலத்தில் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பதாகும். ஏனென்றால் இது நபியுடைய அரசியலைவிட்டும் முற்றிலும் நீங்கியதும் வெகு தூரத்திலுள்ளதுமாகும். நபி அவர்கள் பத்ரை நோக்கிப்போகும்போது வழியிலேயே தம்மை எதிர்த்துப் போரிட மக்காவிலிருந்து குறைஷிகள் கிளம்பிவிட்டனர் என்ற செய்தி கிடைத்தது. அவர்கள் (அதாவது குறைஷி) தங்கள் முழுசக்திகளைத் திரட்டிக் கொண்டு தக்க சாதனங்களுடன் புறப்பட்டிருப்பர் என்பது தெளிவான விஷயம். மதீனா முனவ்வரா நபி அவர்களுக்கு மிக அருகில் தான் இருந்தது. இரண்டு மன்ஜில் தொலைவு தான் சென்றிருப்பர். இருந்தும் நபி (ஸல்) அவர்கள் மதீனா முனவ்வராவிலிருந்து தக்க சக்திகளை ஏன் அழைக்க வில்லை? ஆயுதங்களையும் தருவிக்கலாம்; ஆட்களையும் கூப்பிட்டுக் கொள்ளலாம் என்ற சூழ்நிலையிலிருந்தும் ஏன் அழைக்கவில்லை அவர்களை எது தடுத்தது? என்ன அரசியல் திறன் சாணக்கியத்தனம் இருந்தது? அப்படி யென்ன இரகசியம் இதில் இருந்தது?

இவ்வாறே ஏனைய யுத்தங்களும் பயணங்களும் ஆழ்ந்த பாடமொன்றையும் ஆழ்ந்த அரசியல் திறமையையும் தன்னுள் கொண்டுள்ளன. அவை தற்கால அரசியல் வாதிகளின் மூளைகளுக்கு சாட்டையடி கொடுக்கிறது. மூத்தா யுத்தத்தில் போரின் வரைபடமே நபி அவர்களுக்குக் காட்டப்பட்டது. நாம் அனுப்புகின்ற குறைந்தளவு எண்ணிக்கையினர் ரோமர்களின் பெரும் பட்டாளத்திற்கு முன் மிகக் குறைவானவர்கள் என்பதையும் அண்ணலார் விளங்கி வைத்திருந்தார்கள். அச்சமயம் நபி அவர்களிடம்

இருந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை குறைவாகவொன்றும் இருக்கவில்லை. அப்படியானால் இதிலென்ன ரகசியம் இருந்தது?

உலகாதாயத்தை அடைந்துகொள்ளும் அரசியல் திறமை காபிருக்குக் கூட வந்துவிடும். ஆனால் மக்களின் உள்ளங்களை அல்லாஹ்வின் பக்கம் திருப்ப நபியுடைய அரசியல் திறனால்தான் முடியும். நபியுடைய அரசியல் திறன் மக்களுக்குள் தவக்குல் தக்வாவுடைய பண்புகளை உருவாக்கும்.

மேலும் தற்கால அரசியலை விட்டும் கட்டாயம் ஒதுங்கியிருக்கவேண்டும். இந்த அரசியலால் உம்மத் துண்டு துண்டாகி சிதறிப்போய்விட்டது. காபிர்களை எங்கே வெற்றி கொள்வது? நம்மைக் கூட இந்த அரசியலால் ஒன்றிணைக்க முடியாது.

28. சின்னச்சின்ன கருத்து வேற்றுமைகளை விட்டும் தவிர்ந்து கொள்ளல்:

மேலும் சின்னச்சின்ன கருத்து வேற்றுமைகளை விட்டும் தவிர்ந்து கொள்வது இவ்வேலையில் மிக அவசியமானதும் முக்கியமானதுமாகும். தற்காலத்தில் இத்தகைய கருத்துவேறுபாடுகள் சண்டை சச்சரவு யுத்தம் மற்றும் தர்க்கத்தின் பாதையில் செல்லத் தொடங்கிவிட்டது. இத்தகைய கருத்து வேற்றுமைகளால் ஸஹாபா (ரலி) அவர்களிடையே இருந்த பிரியம் ஒற்றுமை ஒருங்கிணைப் பில் எந்தக் குறையும் ஏற்பட்டதில்லை. இதனால் மோதல்கள் உண்டானதில்லை. ஆனால் இன்று ஒருவர் மற்றவருடன் வைத்திருந்த தொடர்பை துண்டித்துக் கொள்ளும் அளவுக்கு இதன் விளைவு முற்றிப்போய் விட்டது. அன்புக்குப் பதிலாக விரோதம் உருவாகிவிட்டது. எனவேதான் இத்தகைய பிரச்சனைகளிலிருந்து தவிர்ந்து கொள்ளச் சொல்லி உம்மத்துடைய கருத்துமோதலுக்கும் சீர்குலைவுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

சத்தியவாதிகளின் அனைத்துப்பிரிவினரும் இவ் வேலையைச் செய்து கொண்டுள்ளனர். அவர்களுடைய ஆலிம்களுக்கு இந்த உசூலை விரும்பி இவ்வேலைக்கு வலுவூட்டுகின்றனர்.

29. பயானுடைய ஒழுக்கங்கள்:

இவ்வேலையில் மிகப்பெரிய அபாயம் பயான் செய்பவர்களின் விஷயத்தில்தான் இருக்கிறது. அவர்கள் தங்களுடைய பயான்களை உசூலைவிட்டும் அகற்றிக் கொள்கிறார்கள். சிலருக்கு பதிலடி சிலருக்கு அடி சிலரின் மீது ஆட்சேபணை சிலரைத் தாழ்த்திப் பேசிவிடுகின்றனர். அல்லது பயான்களின் பணிவுக்குப் பதிலாக பெருமையின் தோரணை வந்துவிடுகிறது. இதுவும் நமக்கு அபாயமான விஷயமாகும். பயான் செய்யும் முறை வேண்டுகோளைப் போல சிறியவர்கள் பெரியவர்களிடம் ஒரு விஷயத்தைக் கூறுவதுபோல் இருக்க வேண்டும். ஆகையால் ஒரு விஷயத்தைப் பற்றிய குறையைக் கூறும்போது, ஒரு விஷயத்தைப் பற்றிய குறைபாட்டைக் குறிப்பிடும்போது "நாம்" என்ற வார்த்தையை உபயோகிக்க வேண்டும். நம்மால் இந்தக் குறைவு ஏற்பட்டுள்ளது. நமக்குள் இந்தக் குறை உள்ளது என்று கூற வேண்டும். பாராட்டும் போது "நீங்கள்" என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டும். இது வெறும் சடங்காக இருக்கக்கூடாது. மாறாக குறையை ஒப்புக் கொள்ளும் உணர்ச்சியுடன் இது வெளிப்பட வேண்டும். தம்முடைய குறையும் குறைவும் மற்றவர் களுடைய குறையைவிட (நம்) முன் இருக்க வேண்டும். பிறருடைய குறைகள் பிழைகளால் அவர்களின் மீது ஆட்சேபிக்கவோ, வெறுப்பை வெளிப்படுத்தும் நிலையோ ஏற்பட்டுவிடக்கூடாது. ஏனென்றால் இதுவும் இக்ராமுக்கு மாறறமானதாகும்.

30. இக்ராம் முஸ்லிம்

இக்ராம் முஸ்லிமை ஒரு முக்கியமான நம்பராக வைக்கப்பட்டுள்ளது. அசல் இக்ராம் மூன்று தரப்பினருக்குச் செலுத்த வேண்டியதாகும். முதலாவது தன்னுடன் இருப்பவர்கள். இரண்டாவது ஆலிம்கள். மூன்றாவது பொதுமக்கள்.

இம்மூன்று தரப்பினருக்கும் இக்ராம் செய்யும் உள்ளத்துடன் இக்லாஸுடன் முயற்சிக்க வேண்டும். இதற்குரிய பயிற்சியும் பழகவேண்டும். அந்தப் பயிற்சி முஸ்லிம் அல்லாதவர்களின் பயிற்சியைப் போல் இருக்கக் கூடாது. மாறாக ஒவ்வொருவருடனும் அவரிடமுள்ள அல்லாஹு தஆலாவுக்குப் பிரியமான புகழுக்குரிய குணத்தை முன்னால் வைத்து நடக்க வேண்டும். குறைந்த பட்சம் முஸ்லிம்களிடத்தில் இதர பண்புகள் இல்லையென்றாலும் அவரிடம் கலிமா சொன்னவர் என்ற சிபத் நிச்சயம் இருக்கும். இது மிகப் பெரிய பண்பாகும். இதைக் கவனத்தில் வைத்து இக்ராம் செய்வது கலிமாவுக்கே இக்ராம் செய்வதைப் போன்றதாகும். கலிமாவுக்கு இக்ராம் செய்வது அல்லாஹு தஆலாவுக்கு இக்ராம் செய்வதாகும்.

31. சாத்திகளுக்கு இக்ராம்

எவர்கள் தங்கள் சாத்திகளிடம் இக்ராமில்லாமலும் தீயகுணத்துடனும் நடந்து கொள்கிறார்களோ அவர்கள் பிறருக்கு எவ்வளவுதான் இக்ராம் செய்தாலும், இக்ராம் அவர்களுடைய தன்மையாக மாறாது. இதை ஒரு சடங்காகவே கருதப்படும். சாத்திகளின் இக்ராமில், தன் வீட்டார்கள் உறவினர்களுக்கு இக்ராம் செய்வதும் கட்டுப்பட்டதே. அதற்கடுத்து முக்கியஸ்தர்கள் மற்றும் காபிர்களுக்கும் இக்ராம் செய்யவேண்டும். இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன் அதிய்யிப்னு ஹாதம், நபி அவர்களிடம் வந்தபோது ரஸூல் அவர்கள் நமது பரிசுத்தப் போர்வையை அவருக்காக விரித்து விட்டார்கள். மேலும் தமது ஸஹாபிகள் இடம்

اِذَا اَتَاكُمْ كَرِيْمُ قَوْمٍ فَاَكْرِمُوْهُ

(ஒரு கூட்டத்தாரின் தலைவர் உங்களிடம் வந்தால் அவரைக் கண்ணியப்படுத்துங்கள்) என்று சொன்னார்கள்.

32. இக்ராமுடைய முக்கிய உசூல்:

அடிப்படை ரீதியில் இக்ராமில் நான்கு விஷயங்களைக் கவனத்தில் வைக்க வேண்டும். மற்ற விஷயங்கள் அதனுடைய கிளைகளாகும்.

1. சிரமங்களில் பொறுமை கொள்ளுதல்
2. தன்பொருளை அவர்களுக்காகச் செலவிடுதல்
3. எல்லோருடனும் புன்சிரிப்புடன் சந்தித்தல்
4. கொடுக்கல் வாங்கலில் மென்மையைக் கையாளுதல்

இந்த விஷயங்களில் பயிற்சி செய்தவாறு இக்ராமைக் கற்றுக் கொண்டால் அல்லாஹு த்ஆலாவிடம் உள்ளத்தால் வேண்டிக்கொண்டிருந்தால் இன்ஷா அல்லாஹ் இத்தன்மை வந்துவிடும்.

மிக்க உயர்ந்த அந்தஸ்துகள் இக்ராம் செய்பவர்களுக்கு உள்ளன. மிகப்பெரிய ஈர்ப்பு சக்தி இக்ராம் செய்பவர்களுள் இருக்கிறது. எதிரியும் பணிந்துவிடுவான். மாற்றானும் நம்மவனாகிவிடுவான் என்ற ஆயத் இந்த இக்ராமைக் கற்பிக்க விரும்புகிறது. அதன் பலாபலனை குறிப்பிடுகிறது.

33. இல்மைக் கற்பதில் ஸஹாபிகளின் தர்த்தீப்

இல்முடைய நம்பரும் இதில் மிக முக்கியமானது. உம்மத்திற்கு நபி அவர்களின் வழிமுறையில் இம்மை கற்கின்ற கற்பிக்கின்ற முறை தெரிந்து விடுமேயானால் நூற்றுக்கு நூறு உம்மத்தில் இல்மு உயிர் பெறும் இந்த தஃவத் பணிமூலம் இவ்வழிமுறைக்கு உயிர்கொடுக்க வேண்டியிருக்கிறது. தற்காலத்திலுள்ள நம்முடைய வழி முறை குறிப்பானவர்களுக்குத்தான் பயன்படும். பொது

மக்களுக்கு அல்ல. இதனால் ஒரு தரப்பினர் இல்முடைய உயர்ந்த படித்தரங்களை அடைந்து கொண்டுள்ளனர். குர்ஆனுடைய ஆய்வுகளையும் நுட்பங்களையும் விவரிக்கின்றனர். இன்னொரு தரப்பினர் கலிமாகூட தெரியாதவர்களாக உள்ளனர். பர்லுகளையும் அறியாதவர்களாக உள்ளனர். அடிப்படைக் கொள்கை களைப் பற்றி கூட அவர்களுக்குச் சேதி தெரியாது.

ஸஹாபாக்கள் இல்மை அடைந்து கொண்ட வழிமுறை மீண்டும் உயிர் பெற்றால் இரு தரப்பினரிடமும் பலன் தருதல், பலன் பெறுதல் உடைய தொடர்பு நிலை பெறும். ஒவ்வொருவருக்கும் தனக்குத் தேவையான இல்மும் வந்துவிடும். ஆனால் தற்காலத்திலுள்ள சம்பிரதாய இல்மைப்பற்றி அதன் வடிவமைப்பு பற்றி சிந்தனைகளில் வேறொன்றாகி ஆகிவிட்டது. இதனால் தப்லீக் செய்பவர்களைப்பற்றி இவர்கள் இல்மின்பால் ஆர்வங்கொள்வதில்லை. ஜனங்களுக்கும் ஆர்வமூட்டுவதில்லை என்றொரு ஆட்சேபணை எழுந்துள்ளது. இன்னொரு விஷயம் எந்தப் பொதுமக்களுக்கு அவர்கள் கலிமா தொழுகையைக் கூட கற்பது அவசியமோ, அடிப்படை கொள்கைகள் அறிவது அவசியமோ, ஹலால் ஹராமை அறிவது அவசியமோ, கொடுக்கல் வாங்கலைப்பற்றிய இல்மு அவசியமோ, அவர்களுக்கு குர்ஆன் ஹதீஸுடைய நுட்பங்களையும் ஆராய்ச்சிகளையும் கூறப்படுகிறது. முந்திய விஷயங்கள் சீராகாமல் அவர்களுக்கு இது அதிகப் பலனை தந்துவிடாது.

عَلِّمُوا النَّاسَ عَلٰى قَدْرِ حَاجَاتِهِمْ

(ஜனங்களுக்கு அவர்களுடைய அமல்கள் மற்றும் அவர்களுடைய தேவைகளுக்கேற்ப இல்மைக் கற்பியுங்கள்) என்று வந்துள்ளது.

எது முதலில் அவசியமோ அதைப்பற்றிய இல்மு முந்திய ஹஜ்ரத்ஜீ மௌலானா இல்யாஸ் அவர்கள் இல்ம்

வேண்டாமென்று சொல்லவில்லை. மாறாக ஒவ்வொரு வரும் தன் தேவைக்குண்டான இல்மைப் பெறுபவர்களாக வும் அந்த இல்மு அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக வேண்டும். வெறும் உல்லாசமான தேடலாக இருக்கக்கூடாது என்பதற்காக ஒரு தர்த்தீபைக் காட்டித் தர விரும்பினார்கள். நபி (ஸல்) அவர்களுடைய ஸஹாபாக்கள் எவ்வழியில் இல்மைக் கற்கிறார்களோ அவ்வழியில் இல்மு அதிகமான பலனைத் தரக்கூடிய தாகவும் பொதுவானதாகவும் ஆகமுடியும். மற்றவழிகளும் கண்டிப்பாகப் பலன் தருபவை தான். ஆனால் இந்தளவுக்கு பலன் கிடைக்காது. மேலும் பொதுவானதும் குறைவே!

34. திக்ருல்லாஹ்வில் ஸஹாபாக்களின் தர்த்தீப்:

அதேபோல திக்ருடைய நம்பரும் மிக முக்கியமானது. இதுவும் நபி அவர்களின் வழிமுயைால்தான் உம்மத்தில் நூறு சதவீதம் பரவலாக முடியும். அவ்வழிமுறையில் ஸஹாபாக்கள் தங்களுடைய வேலைகள் மனைவி மக்கள் அலுவல்கள், ஜிஹாத் போன்றவைகளில் அல்லாஹ்வை திக்ரு செய்பவர்களாக ஆனார்கள். அக்காலத்தில் அதிகமாக திக்ரு செய்ய எந்த அமைப்பை அவர்கள் ஏற்படுத்தியிருந் தார்களோ அது தன்னுடைய அனைத்து தேவைக்களுக் கிடையே நடந்து கொண்டே வேலைகளில் ஈடுபட்டவாறே நடைபெற்று வந்தது. ஆனால் இன்றைய காலத்தில் அந்த அமைப்பு இல்லாததால் அதிகமான நேரங்கள் தேவைப் படும்படியான வேறு அமைப்புகள் உருவாகிவிட்டன. அவற்றிலும் பெரிய பலன் இருக்கின்றது ஆனால் பொதுவாகும் தன்மை குறைவு. மேலும் எல்லோராலும் அதன்படி நடக்க முடியாது.

ஹஜ்ரத்ஜீ இல்யாஸ் ஸாஹிப் அவர்கள் நபி (ஸல்) அவர்களுடைய இந்த திக்ருடைய வழி முறைக்கு உயிர் கொடுக்கவே விரும்பிவந்தார்கள். ஏனென்றால் இதன் மூலம் முழு உம்மத்திலும் அல்லாஹ்வை திக்ரு செய்யும்

பழக்கம் ஏற்பட்டு அவர்கள் தீனுடைய இல்முடனும் உலகக் கல்விகளுடனும் மேலும் தம்முடைய எல்லா வேலை களுடனும் நடந்து கொண்டிருக்க வேண்டும் என்பதற்கே. இதனால் இல்மு-திக்ரு இரு தரப்பினரிடையே நேசம், அன்பு, பலன் தருதல் பலன் பெறுதலின் பாதை நிலை பெறும். ஏனென்றால் ஒவ்வொரு முஸ்லிமும் இவ்விரு வேலைகளுக்கும் மிகவும் தேவையுடையவராக இருக்கிறார்.

35. எல்லா அமல்களையும் தொடர்ச்சியாய் செய்வது அவசியம்:

அசலான விஷயம் ஆரம்பத்திலுள்ள இரு நம்பர்கள் கலிமாவும் தொழுகையுமே. பாக்கியுள்ள மற்ற விஷயங்கள் அவற்றில் சீரான நிலையையும் ஹகீகத்தையும் உண்டு பண்ணுவதற்காகவும் அவற்றைப் பரப்புவதற்காகவும் இருக்கின்றன. தஃவத் பணியில் சரியாகச் செல்வபர் யாரென்றால் இந்த விஷயங்களனைத்தையும் கவனத்தில் வைத்துக் கொண்டு உம்மத்துடன் சேர்ந்து கொண்டு உம்மத்தைச் சேர்த்துக் கொண்டும் தன்னுடைய உலக முன்னேற்றத்தையோ கண்ணியத்தையோ பிரபல்யத்தை யோ தன்னுடைய நோக்கமாக்கிக் கொள்ளாமல் அல்லாஹு தஆலாவின் கலிமாவை உயர்த்துவதையும், குப்ரை இழி வாக்குவதையும் தன்னுடைய நோக்கமாக்கிக் கொண்டவரே!

தன்னுடைய அனைத்து சௌகரியங்களையும் இதற்காக குர்பானி செய்ய வேண்டும். ஆனால் இதிலும் பெருத்த அபாயமுண்டு. ஏனென்றால் இதிலும் ஒருவர் தன்னுடைய தியாகங்கள் புகழுக்குரியது பாராட்டுக் குரியதென கருதிவிடுகிறார். மேலும் பிறரிடமிருந்து இக்ராமைத் தேடுபவராகி விடுகிறார். ஆனால் உண்மை நிலை என்ன? இவ்வேலையில் இக்ராமைத் தேடக்கூடாது. மாறாக பிறருக்கு இக்ராம் செய்வதைக் கற்க வேண்டியுள்ளது. சாத்திகள் தனக்கு இக்ராம் செய்யவில்லை யென்றால் அவர்கள் எனக்கு இக்ராம் செய்யவில்லையென்ற

எண்ணம் மனதில் வரக்கூடாது. மேலும் இதன் காரணமாக வேலையில் சோம்பேறித்தனம் வந்துவிடக்கூடாது. இல்லையென்றால் ஷைத்தான் நாம் செய்தது செய்வித்தது அனைத்தும் வீணாகிவிடும் நிலைக்கு இழுத்துச் சென்று விடுவான்.

36. பதவியாசையிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்:

நான் என் ஆயுள் முழுவதையும் தஃவத்துடைய குர்பானியிலும் வேலைகளிலும் கழித்துவிட்டேன். அப்படியிருந்தும் இவர்கள் என்னை மதிப்பதில்லை என்ற எண்ணம் உள்ளத்தில் எப்போதும் வரக்கூடாது. மாறாக ''அந்தோ! நான் எதுவும் செய்யவில்லையே. கியாமத் நாளில் என்னுடன் என்ன நடைபெறும்? என்பது தெரியவில்லையே? என்னுடைய இந்த உழைப்பு ஒப்புக் கொள்ளப்படுமா? இல்லையா?'' என்று தன்குறைபாடு களை ஒப்புக்கொள்கிற மனோநிலை பெருக வேண்டும். ஸஹாபாக்கள் சரியான முறையில் தியாகங்கள் செய்திருந்தும் தமக்குள் நிபாக் வந்துவிட்டதோ என்று பயப்பட்டனர். இத்தன்மை நமக்குள்ளும் வராதவரை வார்த்தைகள் வெறும் வார்த்தை ஜாலமாகத்தான் இருக்குமேயன்றி ஹகீகத்தாக ஆகாது. சோதனையுடைய நேரத்தில் மனிதன் வார்த்தைகளை மறந்துவிடுகிறான். அப்போது உள்ளத்தின் உண்மைநிலை வெளிப்பட்டு விடுகிறது. பிறகு கிளியைப் போன்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. பல வருடங்களாக கிளிக்குக் கலிமா சொல்லிக் கொடுக்கப்பட்டது. அது எல்லா நேரமும் யார் தனக்கு முன் வந்தாலும் அவர்களிடம் கலிமாவை சொல்லிக் கொண்டிருந்தது. ஆனால் பூனை அதை பிடித்த போது நாவிலிருந்து கலிமா வராமல் கீ...கீ என்ற சப்தம் தான் வந்தது. ஆகையால் ஒவ்வொரு விஷயத்திலும் ஹகீகத்தை நினைவில் இருத்த வேண்டும். நாம் சொல்கின்றோமே "அல்லாஹ்வைக் கொண்டு தான் நடக்கும் அவனல்லாத

வற்றால் எதுவும் நடக்காது" என்ற கலிமாவுடைய வார்த்தை இன்னும் அது கிளியுடைய பேச்சாகத்தான் உள்ளது. அதை நம் உள்ளத்தில் இறக்கி உழைக்க வேண்டும்.

37. கஷ்த்துடைய ஒழுக்கங்களும் முக்கியத்துவமும்!

இவ்வேலையில் கஷ்த் முதுகெலும்பைப் போன்றது. இது அனைத்து நபிமார்களின் நிஸ்பத்தாகும். ரஸூல் அவர்கள் மக்கா முகர்ரமாவில், தாயிபில், ஹஜ்ஜுடைய காலத்தில் மினாவில் கஷ்த் செய்து வந்தனர். சில சமயங்களில் தனியாக சில சமயங்களில் அந்நேரத்தில் முஸ்லிமாகாமலிருந்த ஹஜ்ரத் அப்பாஸ் அவர்களுடன் சமயங்களில் ஹஜ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுடன் சமயங்களில் ஹஜ்ரத்ஜைதுப்னு ஹாரிஸ் அவர்களுடன் செல்வார்கள். இன்பிராதி இஜ்திமாயீ இரண்டு விதமான கஷ்தும் செய்துள்ளார்கள். சூரா யாசீனில் மூன்று நபர்கள். தஃவத் கொடுக்கச் சென்றதைப்பற்றி கூறப்பட்டுள்ளது. ஹஜ்ரத் மூஸா தனது சகோதரர் ஹாரூன் அவர்களுடன் தஃவத் தரச்சென்றதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று கஷ்த்துடைய முக்கியத்துவம் நீங்கிவிட்டது. அது விடுபட்டுப்போய்விட்டது. பள்ளிகளில் உபதேசம் செய்வது மட்டும் மிஞ்சியிருக்கிறது. அதுவுங்கூட ஙனீமத்துதான். ஆனால் கஷ்த்து செய்து மக்களை அழைத்து வந்து பேசும் பேச்சில் இருக்கும் பிரதிபலிப்பு கஷ்த்தின்றி பேசும் பேச்சில் கிடைப்பதில்லை. ஒவ்வொருவரும் தப்பான எண்ணத்தில் வீழ்ந்து கிடக்கின்றனர். உம்மத்தில் போதுமான அளவு ஈமான் உள்ளது. நம்முடைய ஹலால் ஹராம் பர்லுகள் வாஜிபுகள் கடமைகள் கொடுக்கல் வாங்கல்களைப் பயான் மூலம் கேட்டே அமலில் வந்துவிடும் என்று விளங்கிவைத்துள்ளனர். ஆனால் உண்மை நிலவரம் என்ன? விஷயத்தைக் கேட்டு அமல் செய்வது கூட கஷ்டம் என்ற அளவுக்கு ஈமான்

பலகீனமடைந்துவிட்டது. இதன் காரணமாகத்தான் ஏராளமான உபதேசங்கள் பயான்கள் புத்தகங்கள் இருந்தும் உம்மத் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. உம்மத்திடம் முன்னேற்றமில்லை. கெட்ட காரியங்களின் பால் சென்று கொண்டுள்ளது. நல் அமல்களின்பால் முன்னேறுவதில்லை. ஆகவே ஈமான் பலகீனமாகிவிட்டது என்ற எண்ணத்தை மனதில் பதித்து வையுங்கள். தற்போதுள்ள ஈமானால் தீனை நோக்கி வருவது கஷ்டமாகிவிட்டது. முதல் உழைப்பு ஈமானை அதிகப்படுத்துவதைப் பற்றி சிந்திப்பதாகும். எந்தளவு ஈமான் தேவைப்படுகிறதென்றால் மனஇச்சைகளுக்கு மாற்றமாக நபி (ஸல்) அவர்களின் பக்கம் இழுத்துச் செல்வதாக அது இருக்க வேண்டும். ரஸூல் அவர்கள் கூறினார்கள்.

لَا يُؤْمِنُ اَحَدُكُمْ حَتّٰى يُحِبَّ لِاَخِيْهِ مَا يُحِبُّ لِنَفْسِه

தனக்கு விருப்பமானதை தன் சகோதரனுக்காகவும் விரும்பாதவரை உங்களில் யாரும் முழுமையான ஈமான் கொண்டவராக முடியாது.

ஆகவே கஷ்த்து ரொம்ப முக்கியமானது.

கஷ்த்தில் தன்னைப் பணியவைக்கும் பயிற்சி இருக்கிறது.

اَذِلَّةٍ عَلَى الْمُؤْمِنِيْنَ

(முஃமின்களிடத்தில் பணிந்திருப்பார்) -உடைய பாடத்தைப் படிக்க வேண்டும். கற்க வேண்டும். பயிற்சி செய்ய வேண்டும். இன்னொன்று இக்லாஸுடைய பயிற்சி இருக்கிறது. மூன்றாவது பஸீரத்தைப் பெறுவதற்குரிய பயிற்சி இருக்கிறது. நான்காவது உம்மத்தைப்பற்றிய வேதனை கவலை உண்டாகிறது. மேலும் இது நபிமார்களின் சுன்னத்தாக இருப்பதே தனிப்பட்ட சிறப்புக்குரிய காரியமாக இருக்கிறது. இதில் எந்தளவு

உழைப்பும் சிரமமும் உள்ளதோ அது வேறு எந்த அமலிலும் இல்லை. மேலும் எந்தளவு இதில் பொறுமை மற்றும் சகிப்புத் தன்மையின் பண்புகள் கிடைக்குமோ அது வேறு எந்த அமலிலும் கிடைக்காது. இது உயிர் பெறுமேயானால் முழு தீனும் உயிர்பெற்றுவிடும்.

ஹஜ்ரத் முஹம்மது இல்யாஸ் ஸாஹிப் (ரஹ்) அவர்களின் பொன்மொழியொன்று இவ்வாறு கூறுகிறது. நாம் இவ்வேலையின் மூலம் இரண்டு விஷயங்களை விரும்புகிறோம். முதலாவது முழு உம்மத்தும் ஜமாஅத் ஜமாஅத்தாக கிராமங் கிராமமாக, ஊர் ஊராக, நாடு நாடாக, கண்டம் கண்டமாக நபி அவர்களுடைய விஷயங்களை எடுத்துக் கொண்டு சுற்றக்கூடிய சுன்னத்தை உயிர்ப்பித்தவாறு பலப்படுத்த வேண்டும்.

இரண்டாவது விஷயம், ஒவ்வொரு முஸ்லிமுடைய மன வேட்கையும் இவ்வுலகில் என்னுடைய வேலை அல்லாஹ்வின் பாதையில் உயிரைக் கொடுப்பதைத் தவிர வேறில்லை என்பதாக இருக்க வேண்டும்.

மேலும் சரியான உசூல்கள் சரியான நிய்யத் சரியான மனவேட்கையுடன் கஷ்த் செய்யப்பட்டால் மனிதர்களுக்கிடையே தீன் எப்படிப் பரவுமென்றால் மழை பெய்தால் பூமியில் காய்கறிகள், தானியங்கள், பழம், பூக்கள் பூத்துக் குலுங்குவதுபோல் பரவத்தொடங்கிவிடும். மேலும் இந்த கஷ்த்துடைய வேலை ஸஹாபிகள் செய்து வந்ததைப் போல் தமது எல்லா வேலைகளுடனும் தீன் துன்யாவுடைய அலுவல்களுடனும் குடும்பத்தார் இருக்கும் நிலையிலும் ஒவ்வொருவராலும் செய்ய இயலும். மதீனா முனவ்வராவில் பட்டாளமாக இருந்த நிலையிலும் தூதுக் குழுக்களாக இருந்த போதும் இந்த கஷ்துடைய அமைப்புகள் இருந்தது. கஷ்த் உயிர் பெற்றுவிட்டால் நம்மிடத்திலும் மற்றவர்களிடத்திலும் தீன் உயிர் பெற்றுவிடும்.

தேவையற்றவைகளை விட்டுவிடுவதும் கட்டாய மானது. இல்லையென்றால் இவைகளில் ஈடுபடுவதால் தீனுடைய பிரகாசம், ஜொலிப்பு நீங்கிவிடும். இதுவும் இன்று சிக்கலாகிவிட்டது. அல்லாஹு தஆலா நமக்கு தவ்பீக்கைத் தருவானாக!. நமக்கு இலகுவை உண்டாக்கு வானாக. - *மௌலானா ஸஃத் அஹ்மத் கான்.*

38. தாயீ உடைய எட்டு பண்புகள்:

1. உம்மத்தை நேசித்தல்

2. தன் சீர்திருத்தத்தை நிய்யத் செய்து தஃவத் தருதல்

3. உயிர், பொருள், நேரம் ஆகியவற்றை தியாகம் செய்யும் மனவேட்கையுடன் இருத்தல்

4. பெருமை தீமைகளுக்குப் பதிலாக பணிவையும் தாழ்மையையும் மேற்கொள்ளுதல்

5. வெற்றி கிடைப்பதை அல்லாஹ்வின் உதவியாக விளங்குதல்

6. மக்கள் தன்பேச்சை ஏற்காததற்காக நிராசையாகாமல் இருத்தல்

7. மக்கள் தொல்லைகளைக் கொடுத்தால் பொறுமை கொள்தல்

8. ஒவ்வொரு நல்ல அமலின் கடைசியிலும் இஸ்திஃபார் செய்தல்.

39. இஸ்திகாமத்துடன் செயல்பட பதினேழு காரணிகள்:
(மௌலானா ஸஃத் அஹ்மத்கான்)

1. உள்ளத்தை ஈடுபடுத்தி இவ்வேலையைச் செய்பவர் நிலைத்திருப்பார்.

2. அன்றாடம் எவர் தஃவத் கொடுத்துக் கொண்டிருப் பாரோ அவருடைய உணர்ச்சிகள் அதிகரித்துக் கொண்டி ருக்கும் தஃவத் கொடுக்காதவரின் உணர்ச்சிகள் சிதறிக் கொண்டிருக்கும்.

3. மாஹவ்லில் இருப்பவர் நிலைப்பார். மாஹவ்லை விட்டும் விலகுபவர் வேலையிலிருந்து விலகிவிடுவார்.

4. இவ்வேலையில் பிளவை உண்டாக்குபவர் வெட்டியெறியப்படுவார்.

5. அமீருக்கு இதாஅத் (வழிப்படுதல்) மஷ்வராவுக்கு கீழ்ப்படிதலுடன் இருப்பவர் நிலைத்திருப்பார்.

6. பிறர் குறையைக் காண்பவர் துண்டாகிவிடுவார்; நல்லவைகளைப் பார்ப்பவர் நிலைப்பார்.

7. பணிவை மேற்கொள்பவர் நிலைத்திருப்பார். பெருமையுடன் நடப்பவர் நிலைக்க மாட்டார்.

8. புறம் பேசுதல், உலகாதாயங்கள், இழித்துரைத்தல், தீய பார்வை, மன இச்சை இதுபோன்றே பாவங்களால் வேலையிலிருந்தே தூக்கியெறியப்பட்டு விடுகிறார்.

9. பச்சாதாபம் (கைசேதம்) தவ்பா இஸ்திஃபாருடன் நடப்பவர் நிலைப்பார்.

10. பிறருடைய தவறுகளைத் தன் மேல் போட்டுக் கொள்பவர் நிலைப்பார். பிறர் மீது போட்டுவிடுபவர் நிலைக்க முடியாது.

11. நபி (ஸல்) அவர்களுடன் முனாபிக் தனத்துடன் நடந்து கொள்பவர் பலனடைய முடியாது. இறுதியில் ஈமான் கூட நஸீபாகாது.

12. பிறருடைய தவறுகளுக்கு தக்க காரணம் சொல்லி நல்லதொரு விளக்கத்தைக் கூறுபவர் நிலைத்திருப்பார்.

ஒவ்வொரு விஷயத்திற்கும் மாற்றமான கருத்தை விளங்குபவர் நிலைக்க முடியாது.

13. அல்லாஹ்வை பயந்தும் அவனிடம் இறைஞ்சிக் கொண்டும் செல்பவர் நிலைப்பார். நிலைத்திருப்பதை கேட்டுத்தான் வாங்க வேண்டும். இல்லையென்றால் எவரும் அசைந்து விடுவார். நபி (ஸல்) அவர்கள் கூட இஸ்திகாமத்திற்காக துஆக் கேட்டுள்ளனர். "யாஅல்லாஹ் ! சிலை வணங்கிகளின் சிலை வணக்கத் திலிருந்து என்னைக் காப்பாயாக'' என்று ஹஜ்ரத் இப்ராஹீம் அவர்களும் துஆக் கேட்டுள்ளனர். சிலை வணக்கம் செய்ய எந்த வாய்ப்பும் இல்லாமலிருந்தும் அவர்களே இப்படித் துஆக் கேட்டிருக்க நாம் எம்மாத்திரம்?

14. இக்லாஸுடன் தியாகம் செய்பவரை ஜனங்களுடைய பாதம் தடுமாறும்போது அல்லாஹு தஆலா எல்லாநிலைகளிலும் நிலைக்க வைப்பான். உயர்ந்த அந்தஸ்துடைய பொருத்தத்தை தருவான்.

15. என்னால் வேலை நடக்கிறது என்றெண்ணுபவர் நீக்கப்படுவார். யாரைப் பார்த்து ஜனங்கள் இவரால் வேலை நடைபெறுகிறது என்றெண்ணுவார்களோ அவரை அல்லாஹு தஆலா தூக்கிவிடுவான்.

16. ஹஜ்ரத் ஜீ அவர்கள் கூறுவார்கள். பிறரைப் பார்த்து நடப்பதில் தடுமாறுபவன் அசலின் மீது எப்படி நிலைப்பான்? நாம் பார்த்து நடப்பவர்கள் தானே!

17. முழு உம்மத்துடைய கவலையை எடுத்துக் கொண்டு செல்பவரின் மனநிலையை அல்லாஹு தஆலா முழுஉலகிலும் போட்டுவிடுவான்.

த∴வத் தஸ்கியா த∴லீம்

இன்ஷா அல்லாஹ்............

எமது அடுத்த வெளியீடுகள் :

1. தப்லீக் திருப்பணி
(மர்கஸ் பெரியார்களின் உசூல்கள், பயான்கள்)
2. ஹஜ்ரத்ஜீ யூசுப் (ரஹ்) அவர்களின் பொன்மொழிகள்
3. ஹஜ்ரத்ஜீ இல்யாஸ் (ரஹ்) அவர்களின் பொன்மொழிகள்
4. ஹஜ்ரத்ஜீ இன்ஆமுல் ஹசன் (ரஹ்) அவர்களின் பொன்மொழிகள்
5. ஹயாத்துஸ் ஸஹாபா

வெளியீடு :

தஹ்ரீக்கே ஈமான்

இஸ்லாமிய மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டகம்
63, சலவையாளர் காலனி 2-வது தெரு
சைதா பேட்டை, சென்னை - 15.

அல்மதனீ பிரிண்டிங் ஒர்க்ஸ்
தென்னூர் ஹைரோடு பள்ளிவாசல், திருச்சி - 620 017.
போன் : 2740013.

தப்லீக் வேலையின் முக்கிய உசூல்

முபல்லிக் அளீம் ஹளரத் மவ்லானா
ஸயீத் அஹ்மத் கான்ஸாஹிப் (ரஹ்) அவர்களின்
மிக முக்கியமான கடிதம் .

தமிழில் :
மௌலவி ஹாபிழ் முப்தீ
A. முஹம்மது ஜுபைர் காஸிமீ

வெளியீடு :
தஹ்ரீக்கே ஈமான்
சைதாபேட்டை, சென்னை - 15.